விலை சதம் 15

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, ஆவணி௳ வியாழன் (22-8-68) ஐ: அவ்.27 புத்தகம் 22 இதழ் 46




## தேசிய அரசாங்கத்தில் நம்பிக்கையில்லாதவரை

# உபசபாநாயகர் பதவியில் தொடர அனுமதிக்கலாமா?

## 'டைம்ஸ்' செய்தியின் எதிரொலி;

## அரசாங்க எம். பிக்களிடையே ஏற்பட்டுள்ள மனக் கொதிப்பு!

தேசிய அரசாங்கத்தை தொடர்ந்து தாக்கி வருவதை தாம் நிறுத்தப் போவதில்லையென்றும், தேசிய அரசாங்கத்தை தாக்கக் கூடாது எனப்பிரதமர் தமக்கு கட்டளையிடுவாராளுல், பதவி துறப்பது தவிர தமக்கு வேறு வழியில்லை யென்றும் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் காங்கிரஸ் செயற் குழுக் கூட்டமொன்றில் உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. கூறியதாக சொல்லப்படும் செய்தி யொன்றை இம்மாதம் 16 ம் திகதிய 'டைம்ஸ் ஆப் சிலோன்' ஏடு வெளியிட்டதைத் தொடர்ந்து அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே புதிய சலசலப்பும் கொதிப்பும் தோன்றியுள்ளது.

தேசிய அரசாங்கத்தின் கொள்கைகளிலும் திட்டங்களிலும் உபசபாநாயகருக்கு நம்பிக்கையில்லையென்பதும், அவர் தேசிய அரசாங்கத்துக்கு எதிரான பிரசாரத்திலீடுபடுவதாக கூறப்படுவதும் உண்மையாளுல்' அப்படிப்பட்டவரை தொடர்ந்து உபசபாநாயகர் பதவியில் வைத்திருப்பது அரசாங்கத்திற்கு ஓர் பலவீனமாகி விடும் என்ற கருத்து அரசாங்க பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலோரிடையே எழுந்துள்ளதாக தெரிய வருகிறது.

ஐ. தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களே இக் கருத்தை தெரிவித்துள்ளதாகவும், விரைவில் பிரதமருடன் அவர்கள் இதுபற்றி பேச விருப்பதாகவும் பாராளுமன்ற வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

### டைம்ஸ் செய்தி

'யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் காங்கிரஸ் செயற் குழுக் கூட்டமொன்றில், பகிரங்க மேடைகளிலிருந்து தேசிய அரசாங்கத்தையும் தமிழரசுக்கட்சியையும் தாக்குவதை நிறுத்தும்படி திரு. சிவசிதம்பரத்தை பிரதமர் மூலமாகக் கேட்பதற்கு தமிழரசுக்கட்சி முயன்று வருவதாகவும் அப்படி பிரதமர்

(4-ம் பக்கம் பார்க்க)

### அரசாங்க ஊழியர் பிரச்சினையில்

## ஜீ. ஜீ. கருத்துக்கு எதிராக வவுனியா எம். பி. "மோதல்"

தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்கும் பிரச்சினையில் தமிழ் காங்கிரஸ் கட்சிக்குள் குழப்ப நிலையும் கருத்து மோதலும் ஏற்பட்டுள்ளது.

இப்பிரச்சினை மீது தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலத்துக்கும் வவுனியா எம்.பிக்குமிடையே பலத்த கருத்து வேறுபாடு தோன்றியிருக்கிறதென்றும், திரு பொன்னம்பலத்தின் கருத்தை வெளிப்படையாகவே கண்டிக்க வவுனியா எம். பீ. துணிந்துவிட்டாரென்றும் கூறப்படுகிறது.

அண்மையில் பாராளுமன்றத்தில் இப்பிரச்சினையில் திரு. தா. சிவசிதம்பரம் பா. உ. வெளியிட்ட கருத்து திரு. பொன்னம்பலத்தின் கருத்துக்கு முற்றிலும் வேறுபட்டதென்றும் அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

(7-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரனை சுட்டெரிக்க வேண்டுமாம்!

தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக குரலெழுப்பி வரும் சுதந்திரனைச் சுட்டெரிக்க வேண்டும் என்று ஆவேசம் கொண்டு அலறியிருக்கிறுர் தமிழ் காங்கிரஸ் எம்.பி. யொருவர்; அதுவும் பாராளுமன்றத்தில்!

அவர் யாரென்கிறீர்களா? வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள்தான்! தமிழ் காங்கிரஸ் கட்சியினரின் தகிடுதத்தங்களையும் சுற்று மாற்றுக்களையும், துரோகங்களையும் தயவு தாட்சாண்யமின்றி கண்டித்து அம்பலப் படுத்தி வரும் சுதந்திரனைக் கண்டு தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் அலறிப்புடையாமல் வேறு என்னதான் செய்வார்கள்?

அதே நேரத்தில், தமிழ் மக்களுக்கு எதிராக விஷ வித்துக்களை விதைத்து வரும் பத்திரிகைகளுக்கு வாழ்த்துப் பாடவும் தமிழ் காங்கிரஸ் எம். பி. தவறவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது.

## சிங்கள குடியேற்றம் கட்டுக் கதை!

'நாவற் குழியில் சிங்களக் குடியேற்றத் திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட இருப்பதாக கூறப்படும் செயதி பத்திரிகைகளினுல் உருவாக்கப்பட்ட வெறும் கட்டுக் கதையே அன்றி உண்மையானதல்லவென்று தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

தாம் இது குறித்து அரசாங்கத்துடன் தொடர்பு கொண்ட போது, நாவற்குழியில் சிங்களவர்களை குடியேற்றுவதற்கான எவ்வித திட்டமும் இல்லையென்பதை அறிய முடிந்தது என்றும் திரு. அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சி விழிப்புடனிருக்கும்வரை தமிழ்ப் பகுதியில் சிங்களக் குடியேற்றம் நடக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.




"போக்கிரிப் பையன்"

# இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் மட்டும் கொள்கையை கைவிடும்படி

# "தேசிய" கட்சிகளுக்குப் புத்தி சொல்ல

# "டெயிலிநியூஸ்" முதலில் முன் வரட்டும்!

இலங்கையிலுள்ள ஏனைய அரசியற் கட்சிகளுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் இடையே அடிப்படையில் ஒரு வேறுபாடு இருக்கிறது. அந்த வேறுபாடு தான் தமிழரசுக்கட்சிக்குத் தனிச் சிறப்பை அளிப்பதுடன், இலங்கை அரசியலில் அக்கட்சிக்கு முக்கியத்துவத்தையும் தருகிறது.

அந்த வேறுபாடு தான் என்ன? இந்நாட்டிலுள்ள எல்லா அரசியற்கட்சிகளும்-தமிழ் காங்கிரஸ் உட்பட இன்றைய அரசியலமைப்பான ஒற்றையாட்சி அமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் தமிழரசுக் கட்சியொன்று மட்டும்தான் அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும் என்று கோரி வருகிறது. ஒற்றையாட்சி அகற்றப்பட்டு ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் பல நாடுகளில் நடைமுறையிலிருந்து வருவது போன்ற ஓர் சமஷ்டி அரசியற் திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும்என்று 1949-ம் ஆண்டு முதற் கொண்டு கிளர்ச்சி செய்து வருகிறது.

### காரணம்

இன்றைய ஒற்றையாட்சி அமைப்பு நாட்டின் ஆட்சியதிகாரங்கள் முழுவதையும் பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் ஒப்படைத்திருப்பதாகவும், இதன்காரணமாகவே இலங்கை சுதந்திரம் அடைந்த நாள் முதல் இன்றுவரை தமிழ் பேசும் சிறுபான்மை மக்கள் அடிப்படை உரிமைகளை ஒவ்வொன்றாக இழக்கும்படி நேரிட்டதென்றும் தமிழரசுக்கட்சி உறுதியாக நம்புகிறது.

ஒற்றையாட்சி அமைப்பு, சிங்கள மக்களிடம் அதிகாரம் முழுவதையும் ஒப்படைத்திருக்கிறது. ஒற்றையாட்சி மூலம் கிடைத்த அதிகாரத்தைக் கொண்டு, மாறி மாறி வந்த சிங்கள ஆட்சிகள் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பிடுங்கிக் கொண்டன—பிடுங்கி வருகின்றன.

### சமஷ்டி

10 இலட்சம் மலைநாட்டுத் தமிழர்கள் வாக்குரிமையிழந்து நாடற்றவர்களாகவும், தமிழ்ப் பிரதேசங்கள் சிங்களக்குடியேற்றங்களால் பறிபோகவும், சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்படவும் மூலகாரணமாக விளங்குவது இன்றைய ஒற்றையாட்சி அமைப்புத் தான்.

ஆகவேதான் ஒற்றையாட்சிக்கும், தமிழ் பேசும் இனம் சிங்களப் பெரும்பான்மையினத்தால் விழுங்கப்பட்டுவிடுவோம் என்ற அச்சமின்றி வாழவும் வகை செய்யக்கூடிய சமஷ்டி யரசியற்றிட்டம் வேண்டுமென்று தமிழரசுக் கட்சி கோரிவருகிறது. தமிழரசுக் கட்சியின் இக்கோரிக்கைக்குப் பின்னால் இலட்சக் கணக்கான தமிழ் பேசும் மக்கள் அணிவகுத்து நிற்கிறார்கள்.

### டெயிலி நியூஸ் கருத்து

இந்த நிலையில் ஏரிக்கரை ஏடுகளில் ஒன்றான 'சிலோன் டெயிலி நியூஸ்' பத்திரிகையின் 14-ம் திகதிய இதழில் 'தேசிய நலனை' முன்னிட்டு தமிழரசுக் கட்சி சமஷ்டிக் கொள்கையை கைவிட்டு விட வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

அதற்கு கூறப்பட்டுள்ள காரணங்கள் வருமாறு:—

(1) சமஷ்டி உண்மையில் பிரிவினை அல்லவென்றாலும் இந்நாட்டில் சமஷ்டியென்பது பிரிவினையென பிரசாரம் செய்யப்பட்டுவிட்டது.

(2) இலங்கையில் சிங்களக் கட்சியோ, முஸ்லிம் கட்சியோ எதுவும் கிடையாது. தமிழரசுக் கட்சி மட்டுமே வகுப்புவாத அடிப்படையில் இயங்குகிறது.

(3) சமஷ்டியை கைவிட்டால் மட்டுமே தமிழரசுக் கட்சி நண்பர்களையும், மக்களின் செல்வாக்கையும் பெறும்.

டெயிலி நியூஸ் தெரிவித்திருக்கும் மேற்படி காரணங்கள் எதுவுமே தமிழரசுக் கட்சி, சமஷ்டியை கைவிட வேண்டுமென்பதற்கு போதியதாகத் தெரியவில்லை.

தமிழரசுக் கட்சி ஒற்றையாட்சியை எதிர்ப்பதற்கும் சமஷ்டி கோருவதற்கும் காட்டும் காரணங்கள் எவை எவையோ அவற்றை தீர்ப்பதற்கு சமஷ்டியைவிட்டால் வேறு வழிவகையென்ன என்பதையிட்டு டெயிலி நியூஸ் கருத்து தெரிவிக்கவில்லை.

### சொத்தைவாதம்

சமஷ்டியை பிரிவினையென்று பெரும்பான்மை மக்கள் தவறாக நம்புகிறார்கள் என்பதற்காக தமிழரசுக்கட்சி சமஷ்டியை கைவிட வேண்டுமென்பது சொத்தை வாதமாகும். பெரும்பான்மை மக்கள் காகம் வெள்ளை நிறமென்று கூறினால், மற்றவர்களும் அவவிதமே கூற வேண்டுமா என்ன? காகம் கறுப்புத் தான் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளும்வரை காத்திருக்க வேண்டும்.

அதே போல சமஷ்டி தான் இந்த நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க சரியான வழி யென்பதை பெரும்பான்மை மக்கள் உணரும்வரை தமிழரசுக் கட்சி காத்திருக்க வேண்டுமேதவிர சமஷ்டிகோரிக்கையை கைவிட வேண்டுமென்று கூறுவது நேர்மையான வாதமல்ல.

**சுதந்திரன் சிறப்பு நிருபர்**

இலங்கையில் தமிழரசுக் கட்சி போன்று வகுப்புவாத அடிப்படையில் சிங்களக் கட்சியோ, முஸ்லிம் கட்சியோ கிடையாதென கூறுகிறது 'டெயிலி நியூஸ்'. புதிதாக ஆரம்பிக்கபபட்டுள்ள ஆர். ஜியின் 'சிங்கள மகா ஜன பக்ஷய', ஜனப் பதியுதீன் மாமூத்தின் 'இஸ்லாமிய சோசலிச முன்னனி' யென்பன எந்த அடிப்படையில் இயங்குகின்றன என்பதை டெயிலி நியூஸ் அரசியல் நிருபர் சிந்திக்கவில்லைப் போலும்.

### வகுப்புவாதம் எங்கே?

தமிழரசுக் கட்சி வகுப்புவாதக் கட்சியல்ல. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் கட்சியாக அது இருக்கலாம். ஆனால் மற்ற இனத்தவர்களின் உரிமைகளைப் பறிக்க வேண்டுமென்று தமிழரசுக் கட்சி கூறவில்லை. அப்படிக் கூறாத போது அது எப்படி வகுப்புவாதக் கட்சியாக முடியும்? வாழு, வாழவிடு என்பதே தமிழரசுக் கட்சியின் இலட்சியமாகும்.

ஐ. தே. கட்சி, சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட், சமசமாசக் கட்சி போன்றவற்றுக்கிடையே பல்வேறு விதமான கொள்கை வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவற்றின் கதவுகள் சகல இனத்தவர்களுக்கும் திறந்து கிடக்கின்றன என்கிறார் டெயிலி நியூஸ் நிருபர். அதாவது இக் கட்சிகளுக்கு 'தேசிய' முத்திரை குத்துகிறார்.

### தேசியம் இல்லை

இந்நாட்டில் ''தேசியக்'' கட்சி என்று கூறுவதற்கு எந்த ஒரு கட்சியும் இன்று கிடையாது. இது சிலருக்கு கசக்கக்கூடியதென்றாலும் உண்மை உண்மை தான்.

யூ.என்.பி. ஓர் 'தேசிய' கட்சியாக இருந்தது 1956க்கு முன்னர். என்று சிங்களம் மட்டும் என்ற கொள்கைக்குள் தன்னைப் புகுத்திக் கொண்டதோ அன்றே அது தன் தேசியத் தன்மையை இழந்து விட்டது. இன்று மீண்டும் ''தேசியத்தை'' கட்சிக் புகுத்த முயற்சிக்கிறது.

சுதந்திரக்கட்சி வகுப்புவாத குட்டையிலே ஊறியது மட்டுமன்றி இந்நாட்டு தமிழினத்தின் அடிப்படை உரிமைகளுக்கெல்லாம் உலை வைத்தது என்ற 'பெருமை' பெற்றது. இக்கட்சியில் ஒரு துளி கூட ''தேசியம்'' கிடையாது. இக்கட்சியினர் கூறும் தேசியம் ''சிங்கள தேசியம்'' தான்.

### சம அந்தஸ்து

இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் சுதந்திரக் கட்சியின் தமிழ்விரோதக் கொள்கைக்குள் தம்மையும்இணைத்துக் கொண்டு விட்டன.

யூ. என். பி., சுதந்திரக் கட்சி, சமசமாசக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி இவை நான்கும் உண்மையிலே தேசியக் கட்சி என்ற தகுதியை அடைய வேண்டுமென்றால், சிறுபான்மை இனத்தின் உரிமைகள் பலவற்றைப் பிடுங்கிய சிங்களம் மட்டும் கொள்கையைக் கைவிட்டு இருமொழிகளுக்கும் சம அந்தஸ்து என்ற கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்துக் கொள்கையை ஏற்றுக் கொள்ளும்படி இக்கட்சிகளை வற்புறுத்த டெயிலி நியூஸ் போன்ற பத்திரிகைகள் முன் வர வேண்டும்.

டெயிலிநியூஸ் குறிப்பிட்டுள்ள ''தேசிய''கட்சிகளில் சிறுபான்மையினரான தமிழர்கள் சேருவது ஓநாயின் வயிற்றுக்குள் ஆட்டுக்குட்டி நுழைந்த கதையாகிவிடும்—கதையாகி விட்டதை 1956-ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தின் போது கண்டோம்.

டெயிலி நியூஸ் குறிப்பிடும் தேசியக் கட்சிகளில் தமிழர்கள் சேருவதால் எப்பொழுதாவது அக் கட்சிகளின் தலைமையை இந்நாட்டுச் சிறுபான்மை இனத்தவர் பிடிக்க முடியுமா? இந் நாட்டின் பிரதமராக ஒரு தமிழ் பேசும் மகன் வரமுடியுமா?

ஒருநாளும் முடியாது. அந்த அளவுக்கு தேசிய மனப்பான்மை சிங்கள மக்களுக்கும் சிங்களக்கட்சிகளுக்கும் இன்னும்வரவில்லையென்பது மறுக்க முடியாத ஓர் உண்மையாகும்.

### தவறு இல்லை

ஆகவே, சிறுபான்மை இனத்தை அழித்தொழிப்பதையே நோக்கமாக கொண்டு சிங்கள இனவெறியர்கள் வேங்கைகள் என உலவி வரும் இந்நாட்டில், சிறுபான்மை மக்கள் தமது மொழி இனம் கலாசாரம் ஆகியவற்றை காப்பாற்றப் போராடுவதற்கென ஓர் கட்சியையும், ஓர் அரசியற் கொள்கையையும் கொண்டிருப்பதில் தவறேதுமில்லை.

சமஷ்டியை கைவிடும்படி தமிழரசுக் கட்சிக்கு ''புத்தி'' சொல்லு முன், சிங்களம் மட்டும் கொள்கையையும் ஏனைய வகுப்புவாதக் கொள்கைகளையும் முற்றாக குழி தோண்டிப் புதைக்கும்படி யூ. என். பி, சுதந்திரக்கட்சி, மற்றும் இடதுசாரிக்கட்சிகளுக்கும் ஆலோசனை கூற டெயிலி நியூஸ் முன் வருமா?

இந்நாட்டிலுள்ள சிங்கள மக்களின் கட்சிகள் அனைத்தும் சிங்களம் மட்டும் கொள்கையைக் கைவிட்டு சம அந்தஸ்துக் கொள்கையை ஏற்றுக்கொள்வதுடன், தமிழினத்தை ஒழித்துக்கட்டும் நடவடிக்கைகளையும் முற்றாகக் கைவிட்டு மனமாற்றம் அடையுமானால், தமிழரசுக் கட்சியும் சில வேளைகளில் சமஷ்டியைக் கைவிடுவது பற்றிச் சிந்திக்கக் கூடும்.

(9-ம் பக்கம் பார்க்க)

# "உப சபாநாயகர் மீது— வஞ்சம் தீர்க்கிறது தினபதி!"

"பொய்யிலே பிறந்து பொய்யிலே தன்னை அழித்துக் கொண்டு வரும் 'தினபதி' என்னும் தமிழ் விரோத ஏடு 13-8-68ம் திகதிய இதழில் மீண்டும் ஓர் பெரிய பொய் மூட்டையை அவிழ்த்துக் கொட்டியிருக்கிறது. உப சபாநாயகருக்கு வாய்ப் பூட்டு இடுதல் பற்றி ஆராய தமிழரசுக்கட்சி பாராளுமன்றக் குழு அவசரமாகக் கூட்டப்பட்டதென்ற அதன் கூற்று எள்ளளவும் ஆதாரமற்ற பச்சைப் பொய்'' என்று தமிழரசு பா. உ. ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் தெரிவித்தார்.

துரோகத்தையும் பொறாமையையும், கயமையையும் கலந்து கற்பனையில் உருவாக்கப்பட்டு தினபதியில் வெளியிடப்பட் குறித்த செய்தி தினபதி ஆசிரிய பீடத்தின் மனக்கொதிப்பையே காட்டுகிறதென்றும் தினபதியை அன்று தேடித் திரிந்த ஒரு பா. உ. கொடுத்த பொய்த்தகவலை நம்பியே தினபதி இப் பொய்ச் செய்தியை திரித்து உருவாக்கியிருக்கிறதென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

'தினபதியின் பொய்ப்பிரசாரத்தால் தாக்கப்பட்ட உபசபாநாயகர் பத்திரிகைகளுக்கு தடை விதிப்பது நல்லதுதான் என்றுசிலபாராளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தாராம். பாவம், அவர் என்ன செய்வார்? அவர் மீது வஞ்சம் தீர்ப்பதற்காக அவர் சொல்லாதவற்றையும் அவர்சொல்லியதாக கற்பனை செய்தி வெளியிடுகிறது தினபதி.

'அக்கரைப்பற்றில் உபசபாநாயகர் பேசிய பேச்சு தினகரனிலும், ஆங்கிலப் பத்திரிகையொன்றிலும் விரிவாக வெளிவந்தது. அவற்றில் தினபதியில் வெளிவந்த கருத்துக்கள் காணப்படவில்லை. இந்நிலையில் தினபதியிடமிருந்து உபசபாநாயகரை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்!

'குடும்ப நண்பரும் குத்துக்கரண வீரரும் வஞ்சம் தீர்த்து விட்டனர். நஞ்சர்களின் நண்பர்கள் நயவஞ்சகர்களாக இருப்பது இயற்கைதானே!'

இவ்வாறு குறித்த பா.உ. கூறிமுடித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்குமடம்

"சுமைதாங்கி"

அடியேன் பேசுவதாகக் கேள்விப்பட்டதும் மூலை முடுக்குகளிலிருந்த மக்களெல்லாம் என் தரிசனம் பெறுவதற்காகப் படையெடுத்து வந்துகொண்டிருந்தனர். எங்கு பார்த்தாலும் என்னைச் சுற்றி மக்கள் வெள்ளம் கரைபுரண்டோடியது. இந்தத் தரிசனப் பக்தர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஓடி ஒழிந்து கொள்ளக் கூடிய நிலையில் அடியேனில்லை என்பது வாசகர்களுக்கும் தெரிந்ததே.

என்னைத் தரிசிக்க விரும்பியவர்கள் யாரும் வெறுங் கையுடன் வரவில்லை மலரோ மாலையோ கொண்டுதான் வந்தனர். ஒரு காசனைக்காரன் என் முன்னால் ஒரு உண்டியல் பெட்டகத்தையே கொண்டு வந்து வைத்தார். அடுத்த கணம் அதில் பணம் பணம் பணமாகச் சேர்ந்தது. சேர்ந்த பெருந்தொகையான பணத்தை என்ன செய்வது என்ற பிரச்சனை எழுந்தபோது எனக்கு ஒரு ஆலயம் கட்ட ஏற்பாடாகியது. அபத்தம் அபத்தம் ஆலயமல்ல காரியாலயம்.

இந்த இடத்தில் என் கனவு கலைந்துவிட்டது. என்ன அருமையான கனவு, இன்னும் கொஞ்சம் கூடுதலாகக் கண்டிருக்கலாமே என்று பின்னால்தான் எனக்குத் தோன்றியது. 'சுமைதாங்கிகூடக் கனவு காண்கிறதா?' என்று நீங்கள் யாரும் கவலைப்பட வேண்டாம், எழுத்தாளர்களிற் சிலர் ஏனோ எதற்காகவோ கையாளும் தந்திரத்தைத்தான் அடியேனும் கையாண்டேன், கவலையை விடுங்கள்.

'சாயமே இது பொய்யடா, கல்லும் மண்ணும் சிமெந்தும் சேர்ந்த பிண்டமடா' என்று என்னைப் பார்த்து நிச்சயம் வேறு யார் சொன்னாலும் வாசகர்களாகிய நீங்கள் சொல்லமாட்டீர்களென்பது எனக்குத் தெரியும். மனித வர்க்கத்திலும் பார்க்க எங்களுக்கு எப்போதுமே ஆய்வு கூடுதலாகத்தானிருக்கும். ஏனெனில் நாங்கள் எல்லோருக்கும் உபயோகமானவர்கள். நாங்கள் சாதி பார்ப்பதில்லை. யார் சுமை கொண்டுவந்து எம் தலைமேல் வைத்தாலென்ன தோள்மேல் வைத்தாலென்ன நாம் தாங்கிக் கொள்வோம். நாங்கள் எந்த எந்த இடத்தில் இருக்கவேண்டுமோ அந்த அந்த இடத்திலேயே இருக்கிறோம். அதற்குமேல் ஆசைப்படுவதில்லை.

எந்த இடம் நமக்குக் கிடைக்கவில்லையோ அந்த இடத்திலிருப்பவர்களைப் பார்த்து நாம் வயிற்றெரிச்சல்படோம். இத்யாதி காரணங்களால்தான் நம் வர்க்கத்திற்கே நாம் பெருமையைத் தேடிக் கொடுக்கிறோம்.

நிற்க, யாழ்ப்பாணத்தில் இப்போது புதிய சீசன் ஆரம்பமாகியுள்ளது. பனங்கள்ளுச் சீசன், கொட்டைக் கிழங்குச் சீசன், மாம்பழச் சீசன் எல்லாம் போய் இப்போது ஆலயங்கள் ஹரிசனங்களுக்குத் திறந்துவிடும் சீசன் ஆரம்பமாகியுள்ளது. எதுவித ஆர்ப்பாட்டமும் இன்றிச் சமாதான முறையில் சகல ஆலயங்களும் ஹரிசனங்களுக்குத் திறந்துவிடப் போகிறதென்பதற்கு அத்தாட்சியாகக் கலட்டி அம்மன் கண் திறந்துவிட்டாள்.

சிலருக்கு இது கசப்பாக இருக்கலாம். கலட்டி கடுகு போல் சிறிய இடமானாலும் அசைஸ் நீதியரசர் திரு. சிவசுப்பிரமணியம் போன்றவர்களையும் பிரபல எழுத்தாளர்களையும் பெற்றுத் தந்தது கலட்டி என்னும் கடுகுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமாத்திரமல்லாமல் தற்கொலைகளுக்குப் பிரசித்தி பெற்ற இடங்களில் கலட்டியும் ஒன்றாகும். கலட்டி அம்மன் கோயில் பூசகராகப் பல வருடங்கள் பணிபுரிந்த துரையப்பா ஐயர் கூடச் சென்ற வருடம் தற்கொலை செய்து கொண்டமை நினைவு கூரத்தக்கது.

என்னவானாலும் மற்றவர்களுக்காகவாவது வாழ வேண்டுமென்ற எண்ணமில்லாது தற்கொலை செய்வதிலும் சிறிது சுயநலம் கலந்திருக்கிறது, நம்நாட்டிற்காக எவ்வளவோ செய்யலாமே!

தற்கொலையென்றதும் எனக்கு இன்னோர் ஞாபகம் வருகிறது. எந்த அரசியல் கட்சி தமிழினத்தை வாட்டியதோ அந்தக் கட்சி லேபலில் மானமின்றி வந்தவர்கள் அரும் பெருந் தலைவர்களைக் கன்னா பின்னா என்று திட்டித் தற்கொலை செய்து கொள்ளப் பார்க்கின்றனர். பிடித்த இடம் பறிபோகும் நாள் அண்மிவிட்டது என் [illegible] இது வெறும் அரட்டையல்ல.



# கேட்டுப்பாருங்கள்?

திருவாளர் குயுக்தி !!!

எதிர்மன்னசிங்கம்,
கல்லடி முகத்துவாரம்.

கே: என் மனைவி நான் இறந்தால் அவளும் என்னுடன் இறப்பதாகச் சொல்லுகிறள். நம்பலாமா?

ப: நம்பாதீர்கள். நீங்கள் இறந்த பின்னர், உங்கள் மனைவி கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுகிறரா இல்லையா என்பதை உங்களால் எப்படி அறிந்து கொள்ள முடியும்?

கே: கட்டிய மனைவியும் கவலை தீர்க்க மக்களும் இருக்கும் பொழுது வேறு ஒருபெண்ணுடன் தொடர்பு கொள்ளலாமா?

ப: எத்தகைய தொடர்பு என்று நீங்கள் குறிப்பிட்டிருந்தாலல்லவா இக்கேள்விக்கு பதிலளிக்க முடியும்?

ஃ

தமிழன்,
வெள்ளவத்தை.

கே: தமிழ் காங்கிரஸ் பல மாதங்களுக்கு முன்பு ஒரு பத்திரிகை பிரசுரிக்கப் போவதாக சில தினசரிப் பத்திரிகைகளில் செய்தி வந்திருந்தது. அப்பத்திரிகை இப்பொழுது என்னவாயிற்று?

ப: அது அந்தச்செய்தியை பிரசுரித்த தினசரிகளுக்குத்தான் வெளிச்சம்!

ஃ

வாசுகி,
மன்னிங்பட்டினம்:

கே; மாவட்டசபை முடிவுதான் தெரிந்துவிட்டதே தமிழரசுக் கட்சியினர் இன்னும் ஏன் அரசாங்கத்தில் இருக்கின்றுர்கள்?

ப: மாவட்ட சபை கிடையாவிட்டால் அரசாங்கத்திலிருந்து வெளியேறுவோமெனதமிழரசார் எப்போது கூறினர்கள்?

கே: தமிழ்ப்பிள்ளைகள் சிங்களம் படிக்க இனியாவது உடன்படுவார்களா?

ப: ஏன், இருக்கின்ற தமிழுரிமைகளையும் இழக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறீர்களா?

ஃ

இ. தங்கராசா,
வறக்காமுறை.

கே: அன்று கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்தான் எட்டப்பன்! இன்று தமிழனைக் காட்டிக்கொடுப்பவர் யார்?

ப: எட்டப்பன் பரம்பரையில் வந்த பொன்னப்பன்தான்!

இ. அருள்தாஸ்,
சக்கோட்டை.

கே: நான் புது அரசியல் கட்சி ஒன்று ஆரம்பிக்கப் போகிறேன். அதற்கு உதவி செய்வீரா?

ப: ஊர்காவற்றுறை எம். பீயை கேட்டு பாருங்கள்!

ப: நீர் உமது மனைவியோடு சண்டை பிடித்து அவளிடம் கன்னத்தில் அடி வேண்டியதாக என் நண்பன் கூறுகிறுன். இது உண்மையா?

ப: உமது நண்பரை இரு வாரங்களுக்கு முன்னர் தானே அங்கொடையில் சந்தித்தேன்!

ஃ

க. ரஞ்சித்,
யாழ்ப்பாணம்

கே: மனிதன் ஏன் தனது மனதை நேரத்திற்கு நேரம் மாற்றிக் கொள்கிறுன்.

ப: தான் குரங்கிலிருந்து பிறந்ததை மறக்காததனுல்!

கே: இலங்கையில் உள்ள மக்கள் ஏன் மற்றைய நாட்டு மக்களிலும் பார்க்க சோம்பேறிகளாகவும் முயற்சியற்றவர்களாகவும் இருக்கிறுர்கள்.

ப: இங்குதான் இலவசமாக அரிசி எல்லோருக்கும் கொடுக்கிறுர்களே! அதனுல்தான்!

ஃ

க. சிவலோகநாதன்
பாண்டிருப்பு

கே: கல்முனை தொகுதியில் மசூர்மவ்லானு இடைத் தேர்தலில் வெற்றி பெறுதது ஏன்?

ப: அடுத்த பொதுத்தேர்தலில் வெற்றியடைவதற்காக!

கே: சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் தமது தாடியை ஏன் வெட்டுவதில்லை?

ப: இது அவரது துணைவியார் கவலைப்பட வேண்டிய விஷயம். உங்களுக்கு ஏன் அந்தக் கவலை?

வா. சின்னத்தம்பி,
கைதடி வடக்கு;

கே; கைதடியில் இதுவரைகாலமுமில்லாத ஓர் காங்கிரஸ் வாலிபமுன்னணி சென்ற கிழமை ஆரம்பித்தார்கள். ஆரம்பித்த சிலரை அவ்வூர் வாலிபர்கள் எதிர்க்கிறுர்கள் அது ஏன்?

ப: கொள்கையற்று கிழடு தட்டிப் போன காங்கிரசுக்கு வாலிப முன்னணி வேறு? அதனுல் தான் வாலிபர்கள் எதிர்க்கிறுர்கள்?

ஃ

யோ. நரேன்,
கலட்டி.

கே: தங்கள் குயுக்தியான பதில்கள் என்னை மகிழ்விக்கவில்லை. காரணம் என்ன?

ப: மகிழ்விக்கா விட்டால் இந்தக் கேள்வியையே கேட்டிருக்கமாட்டீர்களே!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12




# உனை மீண்டும் காண்போமோ!

வண்டமிழர் தலைநகராய்
வாய்த்த திருமலையின்
தண்ணொளி சேர் புதல்வனாய்
வந்த வரோதயனே!
அண்ணலவன் செல்வாவின்
அருமைப் படையினிலே
உண்மையுடன் உழைத்தாய்!
உனை மீண்டும் காண்போமோ!

(திருமலைச் செல்வர் அமரர் இராஜவரோதயம் அவர்களின் சிராத்ததினம் இம்மாதம் 27ம் திகதியாகும். தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக ஓயாது ஒழியாது பாடுபட்டு உயிர் நீத்த அமரருக்கு சுதந்திரனும் தமிழ் பேசும் மக்களுடன் சேர்ந்து தனது அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறது—ஆர்)


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறுதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# எதிர்க்கட்சிதலைவியின்— "கப்ஸா"

**...."நாம் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் தமிழரசுக் கட்சியின் கொள்கைத் திட்டங்களை நாம் ஒருபோதும் ஏற்க மாட்டோம்."**

—இவ்வாறு கல்முனையில் நடைபெற்ற இஸ்லாமிய சோசலிச முன்னணி மாநாட்டில் சுதந்திரக் கட்சியின் தலைவியும் எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ கூறியிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இச்செய்தி உண்மையாக இருந்தால் திருமதி சிறிமாவோவின் அரசியல் அறிவைக் கண்டு அரசியலில் அரிச்சுவடி பயின்று கொண்டிருப்பவன் கூட நிச்சயமாக எள்ளிநகையாடுவான் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

திருமதி சிறிமாவோவின் இந்த அறிவிப்பு, சனநாயக மரபுகளையும் சம்பிரதாயங்களையும் கேலி செய்வதாகவும், சனநாயக முறைகளில் அவருக்கிருக்கும் அவநம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவுமே இருக்கிறது.

இந்நாட்டில் சனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கவும், சர்வாதிகார ஆட்சியை நிலைநாட்டவும் முயன்றவர்களிடம், சனநாயக முறைகளில் நம்பிக்கையை எப்படித்தான் எதிர் பார்க்க முடியும்?

தமிழரசுக் கட்சியினர், ஏதோ திடீரென்று ஆகாயத்திலிருந்து குதித்து வந்தவர்களல்லர். தங்கள் கொள்கைகளையும் திட்டங்களையும் இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களிடம் வலிந்து திணித்தவர்களுமல்லர்.

சனநாயக முறைப்படி, இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள் முன்பு தமது கொள்கைகளையும் திட்டங்களையும் சமர்ப்பித்து, அக்கொள்கைகளையும் திட்டங்களையும் தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக் கொண்ட பின்னர் தான், தமிழரசுக்கட்சி இந்நாட்டு சிறுபான்மை மக்களின் பலம் பொருந்திய ஓர் கட்சியாக மாற முடிந்தது.

1956-ம் ஆண்டு முதல் 1965 வரை நடைபெற்ற நான்கு பொதுத் தேர்தல்களில் தொடர்ச்சியாகத் தமிழ் பேசும் மக்களில் பெரும்பான்மையோருடைய வாக்குகளைப் பெற்றுத் தமிழ் பேசும் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடிய அந்தஸ்தை தமிழரசுக் கட்சி நிலைநாட்டி வந்திருக்கிறது. இந்த உண்மையை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

**தமிழ் பேசும் மக்களில் பெரும்பான்மையோர் பாராளுமன்ற சனநாயகத்தில் தங்கள் உரிமையை நிலைநாட்டும் மாபெரும் பொக்கிஷமான வாக்குச்சீட்டுகளை தமிழரசுக்கட்சிக்கு அளித்தனர் என்றால் தமிழரசுக்கட்சியின் கொள்கைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டு விட்டனர் என்பதுதானே அர்த்தம்? தங்களுக்காகப் பேசும் உரிமையை தமிழரசுக் கட்சியிடம் கையளித்துள்ளனர் என்பதுதானே அர்த்தம்? எனவே தமிழரசுக்கட்சி ஒரு கருத்தை வெளியிடுகிறதென்றால், அதுதான் இந்நாட்டுப் பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்களின் கருத்து என்றாகிறது.**

இந்த நிலையில் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகளையும் உணர்ச்சிகளையும் பிரதிபலிக்கும் தமிழரசுக் கட்சியைப் புறக்கணித்துவிட்டு சிறுபான்மைப் பிரச்சினையை தீர்க்க ஆவல் காட்டுவது வெறும் கேலிக்கூத்தாகத்தான் இருக்க முடியும்.

இந்தச் சிறிய உண்மை கூட, இந்நாட்டின் பிரதமராக ஒரு காலத்தில் பதவி வகித்த ஒருவருக்குப் புரியவில்லையென்றால், அது இந்த நாட்டின் துரதிருஷ்டம் என்பதைவிட வேறு சொல்ல என்ன இருக்கிறது?

இந்த உண்மை திருமதி சிறிமாவுக்குப் புரியவில்லை என்பதைவிட, சிறுபான்மை மக்களின் உரிமைகளை வழங்குவதில் அவர் இன்னும் அந்தரங்க சுத்தி காட்டவில்லையென்று கூறுவதே பொருத்தமானதாகும்.

ஏனெனில் திருமதி சிறிமாவோவின் கணவரான காலஞ்சென்ற திரு. பண்டா தமிழரசுக் கட்சியை தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமாக ஏற்றுக் கொண்டுதான் 1957-ல் திரு. செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் எழுதினார்.

இந்த அடிப்படையில் தான் 1960லும் சுதந்திரக் கட்சி மீண்டும் தமிழரசுக் கட்சியுடன் உடன்படிக்கைக்கு வந்தது. ஆகவே திருமதி சிறிமா இன்று சிறுபான்மைப் பிரச்சினையில் தமிழரசுக் கட்சிக் கொள்கைக்கு உடன்பட மாட்டோம் என்று கூறுவது யாரை ஏமாற்ற?

# கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்குள்என்பது உறுதியாகியது!

## பொய்ப் பிரசாரம் செய்தோரை வாயடைக்க வைத்த அமிர்தலிங்கத்தின் சவால்!

கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு என்று கூறுவார்கள். அது நூற்றுக்கு நூறு உண்மையான வார்த்தையென்பது தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது களங்கம் கற்பிப்பதற்கு சோரம் போன அரசியல்வாதிகள் சிலர் நடத்திவந்த பொய்ப் பிரசாரம் கடந்த வாரம் தூள் தூளாகிப் போனது மூலம் நிரூபிக்கப்பட்டு விட்டது.

தமிழரசுக்கட்சி மீது பல அபவாதங்களையும் அபாண்டங்களையும் சுமத்தி வரும் அரசியல் எதிரிகள், தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கண்ணியத்துக்கும், நேர்மைக்கும் இழுக்கேற்படுத்தக் கூடிய மனிதத் தன்மையற்ற மிருகத்தனமான குற்றச்சாட்டொன்றையும் கூறத்தயங்கவில்லை.

தமிழரசுக்கட்சி பா. உ. க்கள் சிலர் இலஞ்ச குற்றச்சாட்டு வலைக்குள் அகப்பட்டு திண்டாடுவதவும், அதனால் தான் அரசாங்கத்திலிருந்து வெளியேறதயங்குகிறார்களென்றும் ஒரு பிரசாரம் நாடு முழுவதும் தீவிரமாக நடத்தப்பட்டு வந்தது. இப்பிரசாரத்தில் தமிழ் காங்கிரஸ்கட்சியினரும் முன்னணியில் நின்றார்கள்.

அண்மையில் கிளிநொச்சியில் நடந்த தமிழ் காங்கிரஸ் கூட்டத்திலும் சிலர் அப்படிப்பட்ட நாக்கூசக் கூடிய குற்றச் சாட்டை சுமத்தினராம்.

சில ஆங்கிலப்பத்திரிகைகளும், இதை ஒரு சாட்டாகக் கொண்டு தமிழரசாரின் நேர்மைக்கு களங்கம் கற்பிக்க—அல்லது அப்படியொரு எண்ணத்தை தமிழ் மக்கள் மனதில் ஏற்படுத்த படாத பாடுபட்டார்கள்.

இப்பிரசாரங்களை யெல்லாம் பாராளுமன்றத்தில் கடந்த வாரம் தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் கிழித்தெறிந்து விட்டார்.

தமிழரசு எம். பீக்களில் எவர் மீதாவது அப்படியொரு குற்றச்சாட்டு இருப்பதாக யாராவது நிரூபித்தால், தமிழரசு எம். பீக்கள் அனைவருமே பதவி துறக்க தயாரென்று திரு. அமிர்தலிங்கம் அறிவித்த போது பாராளுமன்றத்தில் இருந்த தமிழ் காங்கிரஸ் எம். பீக்களும் தமிழரசு எதிரிகளும் தலையைத் தொங்க போட்டுக் கொண்டு இருந்ததாக நமது பாராளுமன்ற நிருபர் அறிவிக்கிறார்.

இதில் மற்றொரு சிறப்பான அம்சம் என்னவென்றால், திரு. அமிர்தலிங்கம், இலஞ்சக் குற்றச் சாட்டுகளிருந்தால் அதை நிரூபிக்கும் படி சவால் விட்ட போது பாராளுமன்றக் கூட்டத்துக்கு உபசபாநாயகரும் தமிழ் காங்கிரஸ் எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரம் தலைமை வகித்ததாகும்.

ஏனெனில் தமிழரசார் மீது இவ்வளவு கேவலமான அபாண்டம் சுமத்தப்பட்டதாகக் கூறப்பட்ட கிளிநொச்சி தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் உப சபாநாயகரும் கலந்து கொண்டிருந்தார்.

திரு. அமிர்தலிங்கத்துக்கு பின்னால் பேசிய வவுனியா பா. உ. பதற்றமடைந்து குறிப்பிட்ட கிளிநொச்சிக் கூட்டத்தில் அத்தகையதொரு குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லையென்று மறுதலித்திருக்கிறார்.

ஆனால் திரு. அமிர்தலிங்கம் கிளிநொச்சி தமிழ் காங்கிரஸ் கூட்டத்தில் தமிழரசு எம். பீக்கள் மீது இலஞ்சக் குற்றச் சாட்டுப்பற்றிப் பேசப்பட்டதாகக் கூறிய போது, தலைமை வகித்திருந்த உபசபாநாயகர், அது தவறென்றால் மறுத்திருக்கலாம். ஆனால் அவர் அப்படி மறுக்கவில்லை.

ஆனால் குற்றமுள்ள நெஞ்சு மட்டும் குறுகுறுத்திருக்கிறது.

எப்படியோ போகட்டும், பொய்ப்பிரசாரங்களுக்கும் ஓர் எல்லையுண்டு என்பதை சகலரும் புரிந்து கொண்டு, அரசியலில் இனிமேலாவது கண்ணியத்தைக் கடைப்பிடித்துச் சீரான அரசியலை நடத்திச் செல்ல முன்வர வேண்டுமென்று விரும்புகிறோம்.

---

**தமிழரசுக் கட்சியின் கொள்கைப்படி சிறுபான்மைப் பிரச்சினைக்குத் தீர்வு காணத் தயாராக இல்லை என்று கூறும் அம்மையார், வேறு எப்படி அதைத் தீர்க்கப் போகிறார்? எங்கே அந்தத் திட்டம்? தைரியமிருந்தால் அதை உடனே வெளியிடட்டும்!**

1966 ம் ஆண்டு தமிழ் மொழிக்குச் சில சலுகைகள் அளிப்பதற்கெனக் கொண்டு வரப்பட்ட தமிழ் மொழிச் சட்ட விதிகளை எதிர்த்துப் படுகேவலமாகத் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய தோசை வடைப் பிரசாரங்கள் இன்னும் காதுகளில் ஒலித்தபடியே இருக்கின்றன.

நேற்றுவரை, முன்னர் தாமே தர ஒப்புக் கொண்ட மாவட்டசபை மசோதாவைத் தேசிய அரசாங்கம் கொண்டுவர முயற்சித்ததை எதிர்த்துச் சிங்களப் பகுதிகளில் மிருகத்தனமான முறையில் இனவெறியைத் தமிழர்களுக்கெதிராகத் தூண்டிவிட முயற்சித்தவர்களிடம், இரவோடிரவாக மனமாற்றம் ஏற்பட்டுவிட்டதென்றால், அதை நம்புவதற்குத் தமிழ் பேசும் மக்கள் முட்டாள்களல்லர்!

சுதந்திரக் கட்சி தமிழ்மொழிக்கு எத்தகைய அந்தஸ்துத் தரக்கூடுமென்பதைத்தான் அண்மையில் பாராளுமன்றத்தில் திரு. பீலிக்ஸ் வெளியிட்டிருந்தாரே! தமிழுக்குச் சில காலத்துக்கு மட்டுமே தற்காலிக சலுகை அளிப்பதும் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் தனிச் சிங்களமே இலங்கையடங்கும் கோலோச்ச வேண்டுமென்பதுமே சுதந்திரக் கட்சியின் கொள்கை என்று திரு. பீலிக்ஸ் திட்டவட்டமாக கூறியிருந்தார்.

இந்த அடிப்படையில் இந்த நாட்டிலே சிறுபான்மைப் பிரச்சினையைத் திருமதி சிறிமாவோ தீர்த்துக்கொள்ளலாமென்று நினைத்தால் அது முடியவே முடியாது. தமிழுக்கு நிரந்தரமாக இடமளிப்பதுடன், தமிழ்ப் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத்தைக் கைவிடவும் முதலில் பூர்வாங்கமாக ஒப்புக்கொண்டால் மட்டுமே, ஏனைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியும்.

திருமதி சிறிமா அம்மையார், சிறுபான்மைப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதில் உண்மையிலே அக்கறை கொண்டிருப்பாரேயானால், வீண் ஜம்பங்களையும் வரட்டுக் கௌரவங்களையும் விடுத்துத் தமிழ் பேசும் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் தமிழரசுக் கட்சியின் ஆதரவுடன் மட்டுமே தீர்த்துக் கொள்ள முடியும்.

அப்படியின்றித் தமிழரசுக் கட்சியைப் புறக்கணித்து விட்டுச் சிறுபான்மைப் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகத் திருமதி சிறிமா கூறுவாரானால், அது வெறும் "கப்ஸா" என்பதே தமிழ் பேசும் மக்களின் கருத்துமாகும் என்று வலியுறுத்த விரும்புகிறோம்.

---

### உபசபாநாயக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளையிட்டால் உபசபாநாயகர் செய்யப் போவதென்னவென்றும் சில வாலிபர்கள் கேட்டார்கள்.

'இதற்கு திரு. சிவசிதம்பரம் பதிலளிக்கையில், உண்மையைச் சொல்லுவதிலிருந்து தம்மை யாரும் தடுத்து நிறுத்த முடியாதென்றும், உண்மையை சொல்ல தாம் பின்வாங்கப் போவதில்லையென்றும், பிரதமர் தேசிய அரசாங்கத்தையும் தமிழரசுக்கட்சியையும் தாக்கக் கூடாது என்று தடைபோடுவாராயின் உபசபாநாயகர் பதவியை ராஜினமா செய்வது தவிர வேறு வழியில்லை யென்றும் கூறினார்'

இவ்வாறு இம்மாதம் 16-ம் திகதிய டைம்ஸ் செய்தி கூறுகிறது.

---

### இலஞ்சக்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மீதும் சொல்லவில்லையே என்று சொல்லக் கூடிய வகையிலும் அந்த நிருபர் எழுதிக் கொண்டிருப்பது கேவலமானது; கோழைத்தனமானது.

—தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மையரின் உரிமைகளை பறித்தால் இலங்கையும் பிளவுபட்டு விடும்!

—இராசதுரை

**“சிறுபான்மை இனத்தின் உரிமைகளை அங்கீகரிக்க மறுத்த பல நாடுகள் பிளவுபட்டு இருக்கின்றன. இது வரலாறு நமக்கு உணர்த்தும் பாடமாகும். அந்த நிலை மரகதமணித் தீவாகிய நம் ஈழத்துக்கும் ஏற்படக் கூடாதென்பதே சிறுபான்மை மக்களின் விருப்பமாகும்.**

**இவ்வாறு நிதிநிலையறிக்கை மீது பாராளுமன்றத்தில் இம்மாதம் 12-ம் திகதி உரை நிகழத்திய மட்டு நகர் முதலாவது பிரதிநிதி திரு. செ. இராசதுரை குறிப்பிட்டார்.**

திரு. இராசதுரை மேலும் கூறியதாவது:—

இந்த நாட்டிலே சமூக, சமுதாய ஒற்றுமை மிக அவசியமான ஒன்றாகும். கடந்த சில தினங்களுக்கு முன்பு கைத்தொழில், கடற்றொழில் அமைச்சர் இச்சபையிலே பேசிய பேச்சைக் கேட்டு இந்நாட்டு மக்கள் பெரிதும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் அடைந்தார்கள்.

இந்நாட்டுச் சிறுபான்மை மக்களுடைய தொண்டைக்குள்ளே பெரும்பான்மையின மக்களுடைய மொழியை வலிந்து திணிக்கமுடியாதென்று கைத்தொழில் அமைச்சரவர்கள் தங்களுடைய கருத்தை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.



### மதிப்புக் குறைந்தது

1956ம் ஆண்டுக்குப் பின் இந்நாட்டில் தேசிய அரசாங்கம் ஏற்படும் வரை இந்நாட்டின் பொருளாதார நிலைமை சீர்குலைந்திருந்தது. இந்நாட்டின் தேசிய வளம் குறைந்தது. இந்நாட்டில் சமூக ஒற்றுமை இல்லாமல் போய்விட்டது. இந்நாட்டிலே சகோதரத்துவ நிலை அற்றுப்போய் விட்டது. வெளி நாடுகளிலே நம் தாய் நாட்டின் மதிப்புக் குறைந்து விட்டது.

அன்று ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டுப் போன கூட்டாட்சிவாதிகள் மீண்டும் அரசியல் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்காக மறுபடியும் இந்நாட்டிலே வகுப்பு வாதத்தை, மொழி வெறியை ஏற்படுத்த முனைகின்றார்கள்.

### ஒற்றுமை சிதைந்தது

இந்நாட்டின் சிறுபான் பான்மையினராகிய நாம் சரித்திர காலந் தொடக்கம் இந்நாட்டிலே வாழ்ந்து வருகிறோம் என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்நாட்டின் வரலாற்றுக் காலத்திலிருந்தே இந்நாட்டின் ஒரு பகுதியைத் தமிழ் மக்களும் மறுபகுதியை இந்நாட்டுச் சிங்களம் பேசும் பெருமக்களும் ஆண்டு வந்திருக்கிறார்கள் அவர்கள் நட்புறவோடு வாழ்ந்திருக்கின்றார்கள்.

அரசியல் காரணங்களுக்காக, குறுகிய சுலோகங்களை வைத்து இந்த நாட்டு மக்களின் வாக்குகளைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்று நினைக்கின்ற அரசியல் வாதிகளினுல்தான் இந்த நாட்டின் ஒற்றுமை குலைந்து இந்த நாட்டின் பொருளாதாரம் ஷீணித்து இந்த நாட்டின் தேசிய வளம் சிதைந்து போனதென்பதை நாம் இந்தச் சபையில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

### சந்தர்ப்பம் அளித்தோம்

எந்த ஒரு கால கட்டத்திலும் நாம் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஒற்றுமைக்கும் உழைத்து வந்திருக்கிறோம் என்பதை நமது கட்சியின் கடந்தகால அரசியல் வரலாறு எடுத்துக்காட்டிருக்கிறது. இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களோடு இணைந்து சகோதரர்கள் போல ஒன்றாக வாழ்வதற்கு எத்தனையோ சந்தர்ப்பங்களை நாம் ஒவ்வொரு அரசாங்கத்துக்கும் அளித்து வந்திருக்கிறோம்.

1956ம் ஆண்டு முதல் 1960ம் ஆண்டு வரை ஒவ்வொரு கால கட்டத்திலும் நாம் இந்த நாட்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், கூட்டாட்சிவாதிகளுக்கும் நமது கொள்கைகளில் இருந்து இறங்கி ஓரளவு அவர்களோடு இணைந்து வாழ்வதற்கான சந்தர்ப்பங்களை அளித்திருக்கிறோம். அச்சந்தர்ப்பங்களை எல்லாம் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி எங்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தவர்கள் மீண்டும் இந்த நாட்டில் சமூகக் கிளர்ச்சிகளை உண்டாக்கி அடுத்த தேர்தலில் வெற்றி பெறுவதற்கான முயற்சிகளை இன்று செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டின் தேசிய வளம், பெருகி சமூக ஒற்றுமை மலர சிறுபான்மை மக்களுடைய உரிமைகளைக் கொடுப்பதில் ஒருவருமே பின் நிற்கக் கூடாது. சிறுபான்மை மக்களுடைய உரிமைகளைப் பறித்த எந்த நாடும் உலக சரித்திரத்தில் முன்னேறியது கிடையாது.

### ஜெர்மனியும் ஸ்பெயினும்

மனித வர்க்கத்திற்குக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு வரப்பிரசாதம் தான் வரலாறாகும். ஜெர்மனிய தேசம் சிறுபான்மை மக்களை அடக்க முற்பட்டதன் காரணமாகப் பிளவு பட்டுப் போனதைக் காண்கிறோம். உலகில் அறிவுக் களஞ்சியமான பல மேதைகளை உற்பத்தி செய்த ஜெர்மன் நாடு இன்று துண்டாடப்பட்டிருக்கின்ற பரிதாப நிலையைக்காண்கிறோம்.

ஸ்பானிய தேசமும் தனது நாட்டின் சிறுபாண்மை மக்களாகிய இஸ்லாமிய மக்களின் உரிமைகளைப் பறிக்க முனைந்த காரணத்தினால் அது ஐரோப்பிய சரித்திரத்தில் ஒரு நோஞ்சல் நாடாக மற்றவர்களால் மதிக்கப் பட முடியாத ஒரு தேசமாக விளங்குவதையும் இன்று நாம் காண்கிறோம்.

(7-ம் பக்கம் பார்க்க)


CCS

# யானை அடையாள போத்தல்மூடிப்போட்டி

## 100 பரிசுகள் இன்னும் எஞ்சியுள்ளன

**250 பரிசுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.**

**வெகு அண்மையில் பரிசு பெற்றவர்களின் பெயர்கள் இதோ!**

181 எஸ். சுந்தரம், 31/30, கிராண்ட்பாஸ் ரோட், கொழும்பு-14.
182 அல்மாஸ் ஜாபீன், 137/2, டறட் ரோட், கொழும்பு-7.
183 எஸ். ஏ. செல்வநாயகம், வன்னியசிங்கம் ரோட் இணுவில் (தெற்கு).
184 திருமதி ஏஸ்டரேஸ் ஹோர்வட், கொஸ்வத்த ரோட், நாவல, இராஜகிரிய.
185 விஜயலட்சுமி விஸ்வலிங்கம், வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
186 ஏ. சி. எம். நூர்டீன், 78/1, சென். ஜோசப் வீதி, கொழும்பு-14.
187 எச். எ. டி. ஜோன் சிங்கோ, நீர்ப்பாசனகந்தோர், தமனு, அம்பாறை.
188 எம். கே. தனபால, 132, கோணவெல்ல, களனி.
189 என். பத்மநாதன், செட்டி வீதி, பருத்தித்துறை.
190 எஸ். மோகனதாஸ், 10, பட்டணத்தெரு, திருகோணமலை.
191 எஸ். சண்முகராஜா, பொலிஸ் ஸ்டேஷன், கொள்ளுப்பிட்டி.
192 எம். ஐ. எம். மகரூவ், 61, காலிரோட், ஹெனமுல்ல, பாணந்துறை.
193 திருமதி ஜே. ஈ. கொரெயோ, 115 ஏ, அலென் அவன்யூ, தெகிவளை.
194 டெஸ்மண்ட் பீரிஸ், செவிடர், குருடர் வீடமைப்புத்திட்டம், கட்டுநாயக்க.
195 எம். எச். எம். ஹூஸெயின், அட்டிவில்ல எஸ்டேட் களுததுறை.
196 கே. விஜயதாஸ, வெளிகொட, களுத்துறை தெற்கு,
197 பி. எல். ஹென்றிகஸ் மென்டிஸ், இலங்கை வங்கி, களுத்துறை.
198 மெரில எச். பெர்ணண்டோ, பார்ம் ஹவுஸ, மொறட்டுவை.
199 ஜே. மோர்வின் டி அல்விஸ், ‘‘லொறெட்டோ’’ கொச்சிக்கடை நீர்கொழும்பு.
200 பி. எம். பி. குணசிறி, 33, மீபிட்டியா, நாவலப்பிட்டி.
201 எஸ். அருளேந்திரன், 23, வகஷோல் லேன், கொழும்பு-2.
202 ஜி. ஈ. பெரேரா, 199, சங்கபோ மாவத்தை, உணுபிட்டி, வத்தளை.
203 கே. கந்தசாமி, 281, வார்ட் பிளேஸ், பொரளை.
204 கே. டி. தர்மசேன, 29, தெலன்கபத, வத்தளை’
205 எல். பி. ஜயனெரிஸ், 671, பட்டுவத்தை ரோட், தலங்கம.
206 டபிள்யூ. வி. பீட்டர் சில்வா, ‘‘சில்வர் ஸ்டீம்’’ தம்பரவிலா, வைக்கால்.
207 ஜி. டப்ளியூ. கஜபால, 52, கல்கனு ரோட், கொரகன, மொரட்டுவை.
208 நிமலசிறி, தோட்டாவத்தை, சென்ட்ரல் டிஸ்பென்சரி, மஹரகமை.
209 ஜோய் டிமெல், 15, சார்ள்ஸ் டி சொய்ஸா ரோட், இடம், மொரட்டுவ.
210 ஜி. பென்னெட் வீரசூரியா, கச்சேரி, திருகோணமலை.
211 அந்தோனி ஆர். பெர்ணண்டோ, 67, கொரேரா மாவத்தை, சிலாபம்.
212 செல்வி இந்திராணி இரத்நாயக்கா, 795, பேராதனை ரோட், முல்கம்பொல, கண்டி.
213 எம். ஐ. எம். அவுன், 488, ஹெனமுல்ல, பாணந்துறை.
214 எம். சிறிலால் பெரேரா, 7, யூ. சி. வீடமைப்பு திட்டம், குளியாப்பிட்டி,
215 ரவிந்திரநாத் வெலிகம, அம்பிட்டியா, கண்டி.
216 டி. பி. சுந்தர்ராஜ், 59/22 சோண்டர்ஸ் கோர்ட், கொழும்பு-2.
217 வி. பத்மநாதன், வாரி-வளவு‘ கபரைநகர்.
218 ஆர். விஜயசிறி பெரேரா, விஜே கிரீம் ஹவுஸ், கன்கொடவில.
219 எம். ஏ. மிஹிலா, 13, கந்தவதத ரோட், காலி.
220 ஏ. கே. டி, குணசேன, 10. 57வது ஒழுங்கை, கொழும்பு-6.
221 டி. டி. சுரவீர, ‘‘மெனல்’’ போபிட்டிய, பமுனுகம.
222 எச். பீ. டயஸ், 107, மலே வீதி, கொழும்பு-2.
223 சுனில் பெரேரா, 540, கடலான, மொரட்டுவை.
224 பி. ஜயநந்தபெரேரா 238, கொன்கி தோட்ட, வத்தளை.
225 ஜே. ஆர். விஜய திலக்க, 161, ஹினகம, கட்டுகஸ்தோட்டை.
226 எம். மிவ்தா மொகிதீன், 13, ஆர்தர்ஸ் பிளேஸ் கொழும்பு-4.
227 கே. டி. சுமணதாஸ, அருணடிசிஹோட்டல் கொஸ்பவா.
228 ஏ. ஏ. எஸ். லதீர், 211, டீன்ஸ் ரோட், மருதானை.
229 ஜே. எம். டி. சிங்கலி, 581, ஸ்டேசன்ரோட், உணுப்பிட்டிய.
230 ரி. ஜி. எஸ். பெர்டினண்டிஸ், 240, புத்தளம்ரோட், குருணகல.
231 என். குமரேசு, 33, சென்ட் மேரீஸ் ரோட், மவுண்ட்லவனியா.
232 செல்வி முஸ்பீகா காசிம், ‘‘ஜாஸ்மின் கொட்டேஜ்’’ புத்தளம்.
233 செல்வி ஷிராணி சேனநாயக்கா, 77, சேர்க்குலர் ரோட் தெற்கு, குருநாகல்.
234 எம். சுப்பையா, 513, நூரளை வீதி, புசல்லாவ.
235 எஸ். ஏ. வகாப், 218, பொறிதோட்ட கொச்சிக்கடை, நீர்கொழும்பு.
236 ஜி. பி. திசநாயக்கா, பொலிஸ் ஸ்டேசன், கோகரெல்ல.
237 ஜெய். ஏ. ஜெயவர்த்தன, 185, வெலிவத்த, கடுவெல.
238 ரி. டி. டி & ரி. கே. பெர்ணண்டோ, 6/4, மல்வத்தைரோட் தெகிவளை.
239 எம். சி. ஜே. பெர்ணண்டோ, 17/16, பட்டியா தெற்கு, பாணதுறை.
240 செல்வி. தீபதி ஆர். பெரேரா, 16, வேலுவன ரோட், தெமட்டக்கொடை.
241 எல். எவ். ஏ. உபாளி கே. அமரசேன, 19, வெலோன வழி, கொழும்பு-2.
242 ஜே. ரவீந்திரா, 397, புத்தளம் ரோட் குருநாகல்.
243 கே. ராஜேந்திரா, 28/12, செயின்ட் ஜோசப் வீதி, கொழும்பு-14.
244 என். டி. சி. விமலரத்தின, 491, டபிள்யூ. பி. கோணவலை, களனி.
245 டி. மைக்கல் பெர்ணண்டோ, ‘பௌண்டின்’ பையகல.
246 எம். எச். எம். நூர்தீன், 25-1/12, டாம் வீதி, கொழும்பு-12.
247 என். எல். நாணயக்காரா, 412, நாகா கனத்த ரோட், மகரகம,
248 திருமதி. ஈ. டீ. சில்வா, டெய்சிலாண்ட் எஸ்டேட், இலகமுவ.
249 செல்வி. எச். ஜோசப் 6, சாள்ஸ் பிளேஸ், கொழும்பு-13.
250 ஜி. டப்ள்யூ. சிறிசேன, 4/17, வனத்த ரோட் மகரகமை.

**ரூ. 5,000/-, ரூ. 4,000/-, ரூ. 1,500/-, ரூ. 750/- ஆகிய பரிசுகளுக்கு தமது பூர்த்தியாக்கப்பட்ட சமர்ப்பணங்களை இன்னமும் கொண்டு வராதிருக்கும் போட்டியாளர்கள் தாமதியாதீர்கள். 350-வது சரியான சமர்ப்பணம் கிடைத்ததும் மேற்கொண்டு பிரவேசப் பத்திரங் கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா. சமர்ப்பணங்களைப் பரிசிலனை செய்யும் பணி உடனே ஆரம்பமாகும்.**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலஞ்சக் குற்றச்சாட்டை நிரூபியுங்கள்!
# உடன் பதவி துறக்க தமிழரசு எம். பீக்கள் தயார்!

## மனிதத் தன்மையை இழந்து பொய்ப் பிரசாரம் செய்யாதீர்!

### நிதி நிலை அறிக்கை விவாதத்தின் போது பொதுச் செயலாளர் "அமிர்" முழக்கம்!

**இம்மாதம் 12ந் திகதி பாராளுமன்றத்தில் நிதி நிலை யறிக்கை மீது உரையாற்றிய தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் வட்டுக் கோட்டை பா. உ. திரு. அ. அமிர்தலிங்கம், தமிழரசுக்கட்சி மீது சுமத்தப்பட்டு வரும் குற்றங்களுக்கு சுடச் சுட பதிலளித்தார். தமிழரசுக்கட்சி தொடர்ந்து அரசாங்கத்தில் அங்கம் வகித்து வருவது ஏன் என்பதையும் விளக்கினார். அவரது பேச்சின் முதல் பகுதி இங்கு இடம் பெறுகிறது.**

எந்தப் பொருளாதார அபிவிருத்திக்கும் அடிப்படையாக, மூலவேராக அமைய வேண்டியது உள்நாட்டிலுள்ள பல்வேறு மக்களுடைய ஒற்றுமையும் ஒத்துழைப்பும் தான். இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததும் முதல் செய்த வேலை இந்த நாட்டில் வாழும் பல்வேறு இனங்களையும் ஒன்று படுத்தியது தான்.

ஒரு தேசிய அரசாங்கம் என்ற அடிப்படையில் பொருளாதார அபிவிருத்திக்கு மூலாதாரமான ஒற்றுமையை ஏற்படுத்த அது முயற்சி செய்தது. சம தர்மத்தைப் பேசுகின்ற எதிர்க்கட்சியினர், சம தர்மத்தில் இன பேதம், சாதிபேதம், மொழி பேதத்திற்கு இடமில்லை என்பதை மறந்து அரசாங்கம் ஏற்படுத்த நினைக்கும் ஒற்றுமை அத்தனைக்கும் முட்டுக் கட்டையாக இருக்கின்றனர்.

#### எதிர்க்கட்சி முயற்சி

அரசாங்கம் பல்வேறு இனங்களிடையேயும் ஏற்படுத்த நினைக்கும் ஒற்றுமையைச் சீர்குலைக்கும் நோக்கமாகக் கடந்த மூன்றரை ஆண்டுகளாக எதிர்க் கட்சியினர் பணி புரிந்து வந்திருக்கிறார்கள். கடந்த அரசாங்கத்தினால் இந்த நாட்டில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் சிலவற்றை நீக்குவதற்கு இந்தத் தேசிய அரசாங்கம் முற்பட்டநேரங்களில் எல்லாம் வகுப்புத் துவேஷப் பிரசாரத்தில் இறங்கி இந்த நாட்டில் 1956-ம் ஆண்டிலிருந்து 1965-ம் ஆண்டுவரை எந்த நிலைமை இருந்ததோ அதை மீண்டும் ஏற்படுத்த எதிர்க்கட்சியினர் முயற்சி செய்தார்கள் இன்றைக்கும் அதே முயற்சியை அவர்கள் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

இந்தவிதமான சூழ்நிலையில் சமீப காலங்களில் வகுப்பு ஒற்றுமையை, இன ஒற்றுமையைக் குலைப்பதற்கு இந்த நாட்டில் எடுக்கப்பட்ட சில முயற்சிகளைப் பற்றி நான் சிறிதுகூற வேண்டியவனாக இருக்கிறேன்.

#### ஜில்லா பரிஷத்

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு நாட்டு மக்கள் எல்லோரும் அந்த அபிவிருத்தியில் ஈடுபட வேண்டியது அத்தியாவசியம். உதாரணமாக, பல ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்து அந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முற்பட்ட இந்திய அரசாங்கம், அந்த நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் வாழும் மக்களை அந்த அபிவிருத்தியில் நேரடியாக ஈடுபடச் செய்ய விரும்பி, ஒவ்வொரு ஜில்லாக்களுக்கும் "ஜில்லாப் பரிஷத்" என்ற பெயரிலே மாவட்டசுயாட்சி சபைகளை நிறுவியது.

அவ்விதம் நிறுவி, அவற்றின் மூலம் மக்களை அபிவிருத்தித் திட்டங்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்து, அபிவிருத்தியை ஏற்படுத்த வழி தேடிக் கொண்டு வந்திருக்கிறது. அதே முறையிலே, இந்த நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மக்களும் அந்தந்தப் பகுதி அபிவிருத்தியில் ஈடுபாடு கொள்ளக் கூடிய விதமாக, அவர்களுடைய குரல் கேட்கக் கூடிய விதமாக, மாவட்ட சபைகளை அமைப்பதன் மூலம் அதிகாரத்தைப் பரவலாக்கிப் பகிர்ந்தளிக்க இந்த அரசாங்கம் முயற்சி செய்தது.

#### வகுப்பு வெறி

அதனை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு நாடெல்லாம் வகுப்பு வெறியைத் தூண்டிவிட பலர் முற்பட்டார்கள். எதிர்க்கட்சி அங்கத்தவர்களும் முன்னைநாள் பிரதம நீதியரசர் ஒருவரும் அவருடன் சேர்ந்து வணக்கத்துக்குரிய பௌத்த குருமார் சிலரும் இவ்விதம் வகுப்பு வெறிப் பிரசாரத்திய இறங்கினார்கள். அதன் மூலம் நாட்டில் ஒரு கொந்தளிப்பான நிலையை ஏற்படுத்தினார்கள் என்பது எமக்கு நன்றாகத் தெரியும்.



எதிக்கட்சி அங்கத்தவர்கள் இந்தப் பிரசாரத்தில் இறங்கிய முக்கிய நோக்கம், அரசாங்கம் தமது மாவட்ட சபைத் திட்டத்தை நிறைவேற்றிவிட்டால் அதை வைத்து நாம் இந்த அரசாங்கத்தை விட்டுவெளியேறுவோம், அதைத்தொடர்ந்து அரசாங்கத்தை வீழ்த்தி விடலாம் என்று அவர்கள் கனவு கண்டார்கள்.

#### கனவு கண்டனர்

அரசாங்கம் அவ்விதம் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் அதனை நிறைவேற்ற முற்பட்டால் அரசாங்கக் கட்சியிலிருந்து சிலரைத் தமது பக்கத்துக்குச் சாரச் செய்து, அந்த வகையில் அரசாங்கத்தை வீழ்த்தலாம் என்று கனவு கண்டார்கள். எப்படியாவது அரசாங்கத்தை வீழ்த்தும் நோக்கத்தைக் கொண்டு அவர்கள் பணி புரிந்தார்களேயல்லாமல் நாட்டின் நலனில், கொள்கையில் இலட்சியத்தில் எந்தவிதமான பற்றும் அற்றவர்களாக நடந்து கொண்டார்கள்.

இவ்விதமான சூழ்நிலையில்தான், நாட்டில் ஏற்பட்ட வெறியாட்டத்தில் இந்த அரசாங்கத்தை எப்படியாவது வீழ்த்திவிட்டுத் தாம் அதிகாரத்துக்கு வரலாம் என்று அவர்கள் கண்டு கொண்டிருந்த பகற் கனவைப் படுகுழியில் புதைப்பதற்காகத்தான் மாவட்ட சபைகள் அமைக்கப்படாவிட்டாலும் இந்த அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுக்க எமது கட்சி தீர்மானித்து; ஆதரவும் கொடுத்து வருகிறது.

#### இரண்டு காரணங்கள்

எமது இந்தத் திர்மானம் இரண்டு முக்கியமான நோக்கங்களுக்காக எடுக்கப்பட்டது. முதலாவதாக, பிரதம அமைச்சர் அவர்களின் தலைமையில் இந்த நாட்டில் கட்டியெழுப்பப்பட்ட ஒற்றுமையை, வகுப்பு வெறியில் சிதைத் தொழிக்க முற்பட்ட எதிர்க்கட்சியினர் சதிக்கு இந்த நாட்டைப் பலியாக்கக்கூடாதென்பதே எமது முதல் நோக்கம்.

இரண்டாவதாக, தப்பித் தவறி இனவெறி பிடித்தவர்களை அதிகாரத்துக்கு வர விடுவோமானால் இன்று இருப்பதிலும் பார்க்க படுமோசமான நிலைமைக்கு இந்த நாட்டிலுள்ள சிறுபான்மை இனத்தவர்கள் உள்ளாக்கப்படுவார்கள் என்பது எமக்கு நன்றாகத் தெரியும். இவற்றை மனதில் வைத்துத்தான். நாம் தொடர்ந்தும் அரசாங்கத்துடன் இருக்கத் தீர்மானித்தோம்.

#### விசித்திரமான காரணம்

நாங்கள் நாட்டின் நன்மை, இனத்தின் நன்மை கருதி எடுத்த முடிவுக்கு சிலர் விசித்திரமான காரணங்களைக் கூற முற்பட்டிருக்கிறார்கள்.

சமீபத்தில் கிளி நொச்சியில் நடைபெற்ற, உபசபநாயகரும் சமுகமளித்திருந்த ஒரு கூட்டத்தில் இத்தகைய விசித்திரமான காரணங்களைச் சிலர் கூறியதாக அறிந்தேன். அந்தப் பொய்யான கூற்றுகளுக்கு இந்தச்சபையிலே திட்டவட்டமாக மறுப்புத் தெரிவிக்கக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன். எங்கள்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற அங்கத்தவர்கள் சிலர் மீது இலஞ்சக் குற்றச்சாட்டுக்கள் இருப்பதாகவும், நாங்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறினால் அதனால் ஆபத்து அரசாங்கத்தைவிட்டு வெளியேறாமல் இருக்கிறோமென்றும் சிலர் கூறுகிறார்கள்.

யார் மேல் இலஞ்சக் குற்றச்சாட்டு இருக்கிறது என்று பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னால் தங்களுக்கு ஆபத்து என்பதால் பொதுப்படையாக தமிழரசுக் கட்சி அங்கத்தினர்கள் மேல் இலஞ்சக் குற்றச்சாட்டு இருகிறது என்று கூறியிருக்கிறாகள்.

#### சபாநாயகரைக் கேட்டேன்

கிளிநொச்சியில் உபசபாநாயகரும் கூட்டத்தில் அந்தக் கூற்றுக் கூறப்பட்டது என்று அறிந்தவுடன் நான் சபாநாயகரவர்களைச் சந்தித்துஅதைப் பற்றிக் கேட்டேன்.

ஏனென்றால், யாராவது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மீது இலஞ்சக் குற்றச்சாட்டு இருப்பதாக இருந்தால் அதைப் பற்றி விசாரிக்க சபாநாயகரவர்களுடைய அனுமதியை இலஞ்ச விசாரணை ஆணையாளர் பெற வேண்டும்.

#### மறுப்பு

நான் சபாநாயகரவர்களைச் சந்தித்து அப்படி எமது கட்சி அங்கத்தவர் எவர் மேலாவது இலஞ்சக் குற்றச்சாட்டு இருப்பதாகவோ அதைப்பற்றி விசாரிக்க அனுமதி வேண்டுமென்றோ இலஞ்ச விசாரணை ஆணையாளர் கேட்டு இருக்கிறாரா என்று நேரடியாகக் கேட்ட பொழுது அந்த விதமான கோரிக்கை எதுவுமே கிடையாது என அவர் தெட்டத் தெளிவாகப் பதிலளித்தார்.

நீங்கள் சமுகமளித்திருந்த கூட்டத்தில் மாத்திரமல்ல, உப சபாநாயகரவர்களே, எதிர்க்கட்சி அங்கத்தினர்களுடைய சில கூட்டங்களிற்கூட, பெயரைச் சொல்லாமல் இத்தகைய பொய்க்குற்றச்சாட்டுகளைச் சுமத்திக் கொண்டு வருகிறார்கள்.

#### கண்ணியம் இருந்தால்

அவ்விதம் கூறித்திரிபவர்களுக்கு அரசியலில் கண்ணியம் என்றால் என்னவென்பது, நாணயம் என்றால் என்னவென்பது, தெரியுமாயிருந்தால், அவர்களுக்கு மனிதத்தன்மை இருக்குமாகவிருந்தால் இனிமேலாவதுஇத்தகைய பொய் பிரச்சாரங்களை நிறுத்தி விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அல்லது பகிரங்கமாகச் சொல்லட்டும் யார் மீது குற்றச்சாட்டு என்று அல்லது நிரூபிக்கட்டும். நாங்கள் எங்களது பாராளுமன்ற ஸ்தானங்களை விட்டுப் போவதற்கு ஆயத்தமாக இருக்கிறோம் எனபதை இந்தச்சபையிலே நின்று நாட்டு மக்கள் அனைவருக்கும் அறிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

#### கயிறு திரிப்பு

உபசபாநாயகர் அவர்களே, நான் இதைக் குறிப்பிடும் பொழுது நீங்கள் தலைமை வகிப்பது சாலவும் சிறந்தது. பொருத்தமானது. மகிழ்ச்சிக்குரியது.

சில பத்திரிகைகள் கூட இத்தகைய பிரசாரத்தில் ஈடுபட்டதை நாம் அறிவோம். கௌரவ ஊர்காவற்றுறை பிரதிநிதி திரு.வீ. நவரத்தினம் வெளியிட்ட ஒரு அறிக்கையில் 'எங்களுடையவீடுகளில் சில எலும்புக் கூடுகள்' 'skeleton in the cup-board' என்று ஏதோ ஒரு ஒரு வசனம் சொன்னாராம்.

அதை வைத்துக் கொண்டு ஒரு பத்திரிகையின் அரசியல் நிருபர் கயிறு திரிக்கத் தொடங்கினார். கயிறு திரிக்கத்தொடங்கிய அவர் நேர்முகமாகச் சொல்லத்தைரியமின்றி கோழைத்தனமாக, மற்றவர்கள் அந்த விதத்தில் நினைக்கக் கூடியதாகவும், அதே நேரத்தில் ஏதாவது நீதிமன்றத்தில் நிற்க வேண்டிய நிலைமை வந்தால் யார்

(7-ம் பக்கம் பார்க்க)


## வாலிபர்களே! பருவமங்கையரே!! தற்கொலை வேண்டாம்!



உங்களைக் காதலித்தவர் கைவிட்டு விட்டாரா? அல்லது விரும்பியவரை அடைய முடியாமற்போய் விட்டதா? சத்தியம் செய்தாரா? சதி செய்தாரா?

நான் இருக்கிறேன். எல்லாப் பிரச்சினைகளையும் எளிதாக முடித்துத் தருவேன். நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

இரகசியம் ஒருகாலும் வெளியிடப்படமாட்டாது.

அரசாங்க அனுமதி பெற்ற மாந்திரீக மகா வசிய நிபுணர்.

**பி எம். திஸாநாயக்க**

303, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மருதானை, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# அன்புள்ள ஜீ. ஜீக்கு....!

# போடாத தபால்

தங்களுக்கு மீண்டும் கடிதம் தீட்ட வேண்டியேற்பட்டதற்காக வருந்துகிறேன். என்ன செய்வது? கடிதம் எழுத வேண்டிய சூழ்நிலையை நீங்கள் தானே உண்டாக்கிவிடுகிறீர்கள்!

'அரசியல் என்பது போக்கிரிகளின் புகலிடம்' என்றான் ஓர் அமெரிக்க அறிஞன். அந்த அறிஞன் கூற்றுப் பொய்த்துவிடக் கூடாதென்பதில் தாங்களும் தங்கள் சகாக்களும் அதிக அக்கறை காட்டிவருகிறீர்கள். தனது 'பொன்மொழியை' பாதுகாத்துவரும் உங்களையும் உங்கள் சகாக்களையும் அந்த அறிஞன் கண்டால் நிச்சயமாக பாராட்டவே செய்வான்! நிற்க.

சிங்களக் குடியேற்றங்களை தமிழ்பகுதியில் நடத்த அனுமதித்தால்தமிழ்ப்பகுதி சிங்கள மயமாகி விடுமென்றும், நாவற்குழியில் சிங்களவரைக் குடியேற்றும் திட்டத்தை எதிர்க்கப் போவதாகவும் கைதடியில் ஓர் கூட்டத்தில் நீங்கள் கூறியதாக பத்திரிகைகளில் செய்தியொன்று படித்தேன்.

அப்பப்பா, சிங்களக் குடியேற்றத்தின் ஆபத்தை நீங்கள் உணர 20 ஆண்டுகள் பிடித்ததை நினைக்கும் போது எனக்கு நீண்ட பெருமூச்சொன்று வருகிறது.

அன்று—1949, 50-ம் ஆண்டுகளிலேயே சிங்களக் குடியேற்றத்தின் ஆபத்துக்களை—பயங்கரங்களை தமிழரசார் பாராளுமன்றத்திலும் வெளியிலும்சுட்டிக்காட்டிய பொழுது-எடுத்து விளக்கிய பொழுது-நீங்களும் உங்கள் கட்சியினரும் கேலி பேசியது இன்னும் என்மனதில் ஒலித்தபடியே இருக்கின்றன.

'சிங்களக் குடியேற்றத் திட்டங்களாம் - அதனால் தமிழ் பகுதி பறி போகுமாம்-இதெல்லாம் தமிழரசுக் கட்சியார், தம்மை வளர்த்துக்கொள்வதற்காக விடும் சரடு'-என்றெல்லாம் உங்கள் கட்சியினர் ஏளனமாகப்பேசினர்; இழிமொழி சிந்தினர்.

எனினும் தமிழரசார் மட்டும் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்களை எதிர்த்து பாராளுமன்றத்திலும் வெளியிலும் தொடர்ந்து குரலெழுப்பி வந்தனர்-வருகின்றனர். சிங்களக் குடியேற்றங்களின் பயங்கர ஆபத்தை முதலில் உணர்ந்து சுட்டிக்காட்டியவர்கள் தமிழரசார்தான் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளா விட்டாலும் உங்களிடம் மனச்சாட்சியிருந்தால் அதைத் தட்டி கேளுங்கள்! அது சொல்லும்!

நீங்கள் மட்டும் சிங்களக் குடியேற்றங்களின் பயங்கரத்தை அன்று உணர்ந்திருந்து தமிழரசாருடன் சேர்ந்து எதிர்ப்புக் குரல் கொடுத்திருந்தால், கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற பிரமாண்டமான சிங்களக் குடியேற்றங்களை ஓரளவு தடுத்து நிறுத்தியிருக்க முடியும்.

என்ன செய்வது, நீங்கள் தான் தமிழ்ப் பகுதி சிங்களக் குடியேற்றங்களால் பறிபோய்க்கொண்டிருந்த போது மந்திரி பதவி என்ற மாய மங்கை தந்த போதையில் ஊறிக்கிடந்தீர்களே!

நீங்கள் மந்திரி பதவியைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்த போது தானே,

கல்லோயா,

கந்தளாய்,

அல்லை,

போன்ற இடங்களிலெல்லாம் சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்பட்டன. இவற்றையெல்லாம் நீங்கள் மறுக்க முடியுமா?

குறும்புக்காரனாக இருக்கிறானே என்று எண்ணிவிடாதீர்கள்.

தமிழரசார் வடக்கு கிழக்கு மாகாணங்களை தமிழ் பிரதேசமாக தொடர்ந்து காத்து வருவதற்காக சமஷ்டி ஆட்சிகோரும் போது, 'ஐயையோ தமிழரசார் வடக்குக் கிழக்குக்குள் தமிழரை அடக்கிவிட முனைகிறார்களே, வடக்கே பருத்தித்துறை தொடக்கம் தெற்கே தேவந்துறை வரை தமிழ் மக்களுக்கு உரிமையிருக்க வேண்டுமென்று கூறுவீர்களே! இப்பொழுது நீங்களே வடக்கும் கிழக்கும் சிங்களக் குடியேற்றத்திலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமென்று கூறுவதானால், இலங்கையின் ஏனைய பகுதிகளைவிட வடக்கு கிழக்கில் தமிழ் மக்களுக்கு

ஆசை நிறைவேற்ட்டும்! கனவில் என்றாலும் வீரர்கள் போல காட்டிக்கொள்ள வேண்டாமா?

இராமநாதன் பல்கலைக் கழகம் ஏற்படுவதற்கு தமிழரசார்தான் முட்டுக்கட்டை போடுவதாக கூறினீர்களாம். தமிழரசார் மீது ஏதாவது குற்றம் சுமத்தாவிட்டால் உங்களுக்கு தூக்கமே வராது போலிருக்கிறது.

இராமநாதன் பல்கலைக் கழகத்தை தாம் எதிர்ப்பதாக தமிழரசார் எங்கு கூறினார்கள் என்பதை சிறிது விளக்குவீர்களா? மாறாக, இராமநாதன் பல்கலைக் கழகத்துக்கு அடையாள மான்யம் வழங்கும் வரவுசெலவுத் திட்டத்தை கூட தமிழரசார் ஆதரித்துள்ளார்களே!

உங்கள் கையாலாகாத்தனத்தை மறைக்க தமிழரசார்தான் கிடைத்தார்களா?

ஆனால் தமிழரசார் இவரது பொய்ப் பிரசாரங்களுக்கு பயந்து இவரது 'வாயைக் கட்ட' எவ்வித நடவடிக்கையுமே எடுக்கவில்லை. தினபதியும்' உபசபாநாயகரும் சேர்ந்து உருவாக்கிய கட்டுக்கதைதான் அது.

அவரது வாயை தமிழ் மக்களே கட்டிவிடுவார்கள் என்பது தமிழரசாருக்கு தெரியும்.

தமிழரசார் கோரிக்கைகளை பிரதமர் நிராகரித்த பின்னும் அரசாங்கத்தோடு ஒட்டிக்கொண்டிருக்கிறார்களே என்று வயிற்றெரிச்சல் பட்டிருக்கிறார் உபசபாநாயகர்.

தமிழரசார் ஒட்டி இருந்தாலென்ன வெட்டிப்போனாலென்ன அதனால் இவருக்கென்ன கவலை? இவர் எதற்காக பதட்டப்படுகிறார்? துடித்துப் போகிறார்?

தமிழரசார் வெளியேறினால் உள்ளே புகுந்து 'ஏதாவது' பொறுக்கலாம் என்ற எண்ணமா?

தமிழரசார் வெளியேறாமல் ஒட்டிக் கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டும் நீங்கள் மட்டும் ஏன் இன்னும் வெளியேறாமல் கட்டிக் கொண்டு இருக்கிறீர்கள்? இரண்டறக் கலந்து விட்டீர்களா?

ஜீ. ஜீ. அவர்களே, தயவு செய்து உங்கள் கட்சியைச் சேர்ந்த உபசபாநாயகரைச் சிறிது கண்டித்து வையுங்கள். இல்லாவிட்டால் உங்கள் கட்சியின் மானம் (அப்படியொன்று இருந்தால்) காற்றில் பறக்கப் போகிறது.

# சிங்களக் குடியேற்றத்தின் பயங்கரத்தைஉணர்வதற்கு 20 வருடங்கள் பிடித்ததா?

நீங்கள் தேசியத் தலைவர் என்று போற்றி புகழும் பெரிய சேனநாயகாதானே சிங்களக் குடியேற்றத்திட்டங்களின் பிதாமகர்! தமிழ் பகுதியில் சிங்களவர்களை குடியேற்றும் அவரது திட்டங்களுக்கெல்லாம் அன்று 'ததாஸ்து' போட்டவர் நீங்கள்தானே! இதனால்தானே 'அம்பாறை'யென்னும் சிங்களத் தொகுதியே கிழக்கில் உருவாகியது.

சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஏற்பட்ட பின்னர்தான் சிங்களவர் குடியேற்றப்பட்டதாக நீங்கள் கூறுவதன் மூலம் செய்த துரோகத்திலிருந்து நழுவிவிட முடியாது.

சுதந்திரக்கட்சிஅரசாங்கங்கள் நாட்டை ஆண்ட ஒன்பது வருட காலத்திலும், தமிழரசுக் கட்சி கண்ணும் கருத்துமாக இருந்துவந்ததால்,வடக்கு கிழக்கில் பெருமளவில் சிங்களக் குடியேற்றம் எதுவுமே நடத்தப்படவில்லை. இதை எவரும் மறுக்க முடியாது.

இன்னும்உங்களிடம்ஒன்று கேட்க விரும்புகிறேன்.

விசேட உரிமையிருக்கிறதென்பதையும் ஒப்புக் கொள்கிறீர்கள் என்பது தானே அர்த்தம்.

வடக்கையும் கிழக்கையும் தொடர்ந்து தமிழ்ப் பிரதேசமாகப் பாதுகாத்து வரும் நோக்கத்துடன்தானே தமிழரசுக் கட்சி மாவட்ட சபைகள் கோரியது? அதையும் ஏற்பட முடியாமல் மண் போடுவதற்கு முழு மூச்சுடன் நின்றீர்களே!

## 'என்ஸாரெம்"

தமிழ்ப் பிரதேசம் சிங்கள வெள்ளத்தால் அழிந்து விடாதபடி பாதுகாப்பதற்கு தமிழ் மக்களுக்கு சுயாட்சி உரிமை அவசியம் என்பதை இப்போதாவது ஒப்புக்கொள்ளுகிறீர்களா?

அதுசரி, நாவற்குழியில் சிங்களக் குடியேற்றம் நடத்தப்பட்டால் அதை எதிர்த்துப் போராடப்போவதாக கூறியிருக்கிறீர்களே, இது என்ன புதிய 'டுப்'பா?

நாவற் குழியில் சிங்களக் குடியேற்றம் என்பது பொய்ச் செய்திதானமே! அதைத் தெரிந்துகொண்டு தான் 'போர்க் குரல்' கொடுத்தீர்களோ?

நிஜமாகவே போராட்டம் என்றதும் அச்சப்பட்டு காததூரம் ஓடுவீர்களே! 1956 ஆனி ஐந்து சத்தியாக்கிரகத்தின் போது கூட ஒரு முறை தலைகாட்டி விட்டு காடையர்கள் தமிழரசுத் தொண்டர்களைத் தாக்க ஆரம்பித்ததும், நீங்கள் அங்கிருந்து 'நைசாக' நழுவியது இன்னும் கண்ணுக்குள் நிற்கிறதே!

நாவற்குழிப் 'போராட்டத்தை' [illegible] ன். அந்த அளவிலாவது உங்கள்

இதே கடிதத்தில் உங்கள் பிரதம சீடரும் உபசபாநாயகருமான உடுப்பிட்டி 'சிவா' அடித்துள்ள ஓர் புதிய 'டுப்பை' யும் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழரசுக் கட்சிமீது உங்கள் கட்சியினர் சுமத்திய அடையாள அட்டை, இலங்கை இந்திய ஒப்பந்தச் சட்டம், இலஞ்ச ஊழல் போன்ற பல்வேறு குற்றச் சாட்டுக்களை எல்லாம் சந்திக்கு இழுத்து வந்து அவையத்தனையும் புலுடா என்று நிரூபிக்கப்பட்டபின், இந்தப் புதிய 'டெக்னிக்கில்' உடுப்பிட்டி சிவா இறங்கியுள்ளார் போலும்.

'மாவட்ட சபை இல்லையென்ற பின்னும் தமிழரசார் தொடர்ந்து அரசாங்கத்திலிருந்து வருவதற்கு ஒரு இரகசியம் இருக்கிறது. அது அடுத்த தேர்தலுக்கு முன்பு தெரிந்துவிடும். அப்போது மக்கள் உண்மைகளை புரிந்துகொள்வார்கள்'' என்றாராம் உபசபாநாயகர்.

இப்படி 'சஸ்பென்ஸ்' வைத்துப் பேசுவதால் தமிழ் மக்களை ஏமாற்றி விடலாமென்று கனவு காண வேண்டாமென்று அவருக்கு சிறிது புத்திமதி கூறுங்கள். 'சஸ்பென்ஸ்' வைத்துப் பேசுபவர்களை அடுத்த தேர்தலில் 'சஸ்பெண்ட்' செய்து விடுவார்கள் தமிழ் மக்கள் ஜாக்கிரதை!

தமிழரசார் ஏதோ தமது பிரசாரத்துக்கு பயந்து தமக்கு வாய்ப்பூட்டு போட முயற்சிப்பதாக கூறி தமக்குத் தாமே பிரசாரம் செய்துகொள்ளுகிறார் உபசபாநாயகர்.

மக்கள் மறந்து விடாமலிருப்பதற்காக இப்படி ஏதாவது சொல்லிக் கொண்டு தானேயிருக்க வேண்டும்? பாவம்!

## அரசாங்க...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

தமிழ் அரசாங்க ஊழியர்கள் சிங்களம் படிக்க வேண்டுமென்பதே தமிழ் காங்கிரசின் கொள்கையென்றும், அதை அன்றும், இன்றும், தான் சொல்லிவருவதாகவும், எதிர்காலத்திலும் இதே கருத்தைத்தான் மாற்றப்போதில்லையென்றும் அண்மையில் திரு. பொன்னம்பலம் கூறியிருந்தது தெரிந்ததே.

ஆனால் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது பேசிய வவுனியா பா. உ. சிங்கள பிரதேசத்தில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள்சிங்களம் படிக்க வேண்டுமென்பதை தனது கட்சி ஏற்றுக் கொள்வதாகவும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் ஊழியர்கள் சிங்களம் படிக்கத் தேவையில்லையென்பதே தமது கட்சிக் கொள்கையென்றும் அறிவித்திருந்தார்.

அதே நேரத்தில் திரு. பொன்னம்பலத்தின் வலது கை என்று கூறப்படும் ஒரு பிரமுகரிடம் திரு. சிவசிதம்பரம் கருத்துப்பற்றி நமது நிருபர் அபிப்பிராயம் கேட்டபோது, ''முன்பின் யோசிக்கமால் வெளியிடப்பட்ட முட்டாள்தனமான கருத்து அது'' என்றார்.

## சிறுபான்மையரின்..

(5-ம் பக்க தொடர்ச்சி

அப்படி ஒரு நிலை அழகும் இயற்கை வளமும் மிக்க இந்த மரகதமணித் தீவுக்கு வரக்கூடா தென்பதுதான் இந்த நாட்டில் வாழக்கூடிய சிறுபான்மை மக்களின் எண்ணம் என்பதை இங்கு ஆணித்தரமாகக்கூறிவைக்க விரும்புகிறேன்.

# அடுத்த வாரம் இடம் பெறுகிறது!

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலம் அமைச்சராக இருந்த நேரத்தில்ஆயிரக்கணக்கான சிங்களக் குடும்பங்களை அன்றைய அரசாங்கம் கல்லோயாவில் குடியேற்ற திட்டமிட்டதை எதிர்த்து

## 1951 ம் ஆண்டு ஜான் 26 ம் நாள்

தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் பாராளுமன்றத்தில் நிகழ்த்திய போர்ப் பரணி!

தமிழரசுத் தந்தையின் கூர்ந்த மதி[illegible] திரு. பொன்னம்பலத்தின் இனத்துரோகத்தையும் விளக்கும் சொற் பொழிவு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச இழப்புக்கும் சிங்களத் திணிப்புக்கும் இடமளிக்க மாட்டோம்!

## தமிழரசுக்கட்சியை அழிக்க யாராலும் முடியாது! பாராளுமன்றத்தில் பண்டிதரின் சிம்ம கர்ஜனை!!

“இந்நாட்டிலேயிருந்து தமிழரசுக் கட்சியை அழித்து விடலாமென்று பலர் எண்ணுகிறார்கள். அது ஒருபோதுமே நடவாத செயல். நாம் இந்த நாட்டிலே பிறந்து வளர்ந்தவர்கள், இந்நாட்டிலே பரம்பரை பரம்பரையாக சரித்திரமறியாக் காலந்தொட்டு வாழ்ந்து வருபவர்கள். எங்களுக்கும் இங்கே சிங்கள மக்களுடன் சமவுரிமையிருக்க வேண்டும். அந்த உரிமையைக் கொடுக்காத வரை எந்த விதமான அடக்கு முறைகளாலும் சரி, மந்திர தந்திரங்களாலும் சரி தமிழ் மக்களை பணிய வைத்து விட முடியாதென்பதை எதிர்க்கட்சியினருக்கு வற்புறுத்தி கூறுகிறேன்.

தமிழ் மக்களின் தொண்டைக்குள் சிங்களத்தை திணிக்கவோ தமிழ் பிரதேசத்தை சிங்களவர்களைக்குடியேற்றுவதன் மூலம் அபகரித்து விடலாமென்றோ யாராவது கனவு கண்டால் அது வெறும் பகற்கனவாகவே முடியும் என்று எச்சரிக்கவும் விரும்புகிறேன்.

*இவ்வாறு நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போது கலந்துகொண்டு இம்மாதம் 11ம் திகதி மக்கள் பிரதிநிதிகள் சபையில் உரையாற்றிய கிளிநொச்சி பா. உ. கா. பொ. இரத்தினம் குறிப்பிட்டார்.*

*திரு. இரத்தினம் மேலும் கூறியதாவது:—*

அண்மையில், மாவிட்டபுரத்தில் நடைபெற்ற சிறுபான்மைத்தமிழர்களுடைய ஆலயப்பிரவேச முயற்சி பற்றி இன்று பெரிதாகப் பேசப்படுகிறது. அதைப் பற்றி நான் சில விடயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்று சிறுபான் இனத்தவர்களாகிய — தமிழினத்தவர்களாகிய — நாங்கள் உரிமை கேட்கிறோம். ‘அந்த உரிமைகளைத் தருவதற்கு முன் சிறுபான்மைத் தமிழர்களிடம் நீங்கள் பறித்த உரிமைகளைக் கொடுங்கள். அப்பொழுது தான் நீங்கள் உரிமை கேட்கத்தகுதி யுள்ளவர்கள்’ என்று இங்கே எங்களைப் பார்த்துப் பலர் கூறுகிறார்கள்.

தாங்கள் செய்யும் பிழையை மறைக்கவிரும்புகிறவர்கள்— எங்களுக்கு உரிமை தருவதை மறுப்பவர்கள்— இப்படியாக ஒரு நொண்டிச்சாட்டைக் கூறி வருகிறார்கள்.

எங்களுடைய தமிழ்ப்பகுதியிலே மிகச் சிறந்த திருத்மாக விளங்கும் மாவிட்டபுரத்திலே ஏன் இப்படியாகத் தமிழ் மக்கள் — சைவ மக்கள்— திரண்டு எழுந்து சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கிறார்கள் என்றால் அதற்குரிய காரணங்களை நான் கூறுகின்றேன்.

### நாட்டாண்மை காட்ட முடியுமா!

போலிக் காரணங்களை — இந்தச் சபையிலே கூடக் கூறியிருக்கிறார்கள். கோவிலுக்குள் அனைவரையும் விடுவது ஒரு பிரச்சினை அன்று. ஆனால் சைவ சமயத்தைச் சேராதவர்கள் — தெற்கே இருந்து பலர் கடவுளே இல்லை என்று சொல்பவர்கள் அந்தக் கோவிலுக்குள் தாங்கள் விரும்புகிறவர்களை விடுங்கள் என்றால் அங்கே அரிசனங்களுக்கு உரிமை கொடுப்பதல்ல பிரச்சினை.

வெளியிலிருந்து வந்தவர்கள், சைவ சமயத்தைச் சேராதவர்கள் வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எங்கள் கோவில்களிலே வந்து எங்களுக்கு நாட்டாண்மை காட்டமுடியுமா? இப்படிச்செய்யுங்கள் என்று எங்களுக்குச் சொல்ல அவர்கள் யார்? எங்களுடைய கடமை எங்களுக்குத் தெரியும் என்ற முறையிலே இந்தப் பிரச்சினை தோன்றிய படியால்தான் மாவிட்டபுரம் கோவில் ஒரு பிரச்சினைக்கு உரியதாயிற்று.

### தெற்கிலும் உண்டு

சாதி வித்தியாசம் தெற்கிலும் இருக்கிறது, வடக்கிலும் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னைக் கேட்டால், தெற்கே தான் சாதி வித்தியாசம் அதிகமாக இருக்கிறது என்று கூறுவேன்.

எங்களுக்குத் தெரியும் பல உத்தியோகங்களுக்கு— உயர்ந்த உத்தியோகங்களுக்கு சிங்கள மக்களை நியமிக்கும் பொழுது சாதியைப் பார்த்துத்தான் நியமிக்கிறார்கள் என்பது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் அப்படி இல்லை. இந்த நாட்டில் ஒருவர் பிரதம அமைச்சராக வரவேண்டும் என்றால், இந்த நாட்டில் பெரிய பிக்கு நிலையங்களிலே உயர் பதவிக்கு வரவேண்டும் என்றால் சில சாதி மக்களுக்குத்தான் அது உரிமையாக இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

### சைவர்களின் பிரச்சினை

அப்படிப்பட்டவர்கள். ‘ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்’ என்று இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கண்டுரைத்து வந்த தமிழினத்துக்கு சாதி வேற்றுமையை நீக்குமாறு கூறுவதுபொருத்தமற்றது.

எங்களுடைய பகுதியிலே சாதிவேற்றுமை பாராட்டுபவர்கள் இருக்கலாம். அதை எங்களிடம் விட்டுவிடுங்கள். சைவர்களாகிய எங்களிடம் விட்டு விடுங்கள். நாங்கள் மெல்ல மெல்லத் தீர்க்கிறோம்.

### ஒத்துழைத்தது ஏன்?

இன்று தமிழ் மக்களுடைய ஒற்றுமையைப் பெற்றுத்தான் இந்த அரசாங்கம் நடைபெறுகிறது. ‘‘தமிழ் மக்களிடையேயும் சிங்கள மக்களிடையேயும் ஒற்றுமை இருந்தால்தான் நாடு முன்னேற்றம் அடையும்’’ என்று நேற்றைய தினம் இந்தச் சபையிலே பேசிய கைத்தொழில் அமைச்சர் கூறினார்.



தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்த அளவில் அது தமிழ் மக்களுடைய தனிப்பெரும் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு கட்சி. தமிழர்களுடைய அடிப்படை உரிமைகளுக்காகச் சென்ற பல ஆண்டுகளாக தளர்ச்சியின்றி இடைவிடாது போராடி வந்த ஒரு கட்சி. அந்தக் கட்சியின் பிரதிநிதிகள் என்ற முறையிலே, இந்த நாட்டிலே நாங்கள் இழந்த உரிமைகளை ஓர் அளவாவது தருவோம் என்று எங்களுக்கு இந்தத் தேசிய அரசாங்கம் கூறியதால் அதனுதுடன் ஒத்துழைத்தோம்.

தனது கடமைகளைச் செய்ய முடியாத முறையிலே பல சூழ்ச்சிகளினாலும் எதிர்க் கட்சியின் தாக்கத்தினாலும் இந்தத் தேசிய அரசாங்கம் இன்று தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றது. தேசிய அரசாங்கம் நிறைவேற்றிய சட்டங்களைக் கூட இன்று நல்ல முறையில் நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கின்றது. இந்தச் சபையினால் தமிழ் மொழியின் உரிமைகளுக்காகப் பல பிரமாணங்கள் நிறைவேற்றப்பட்டன. அந்தப் பிரமாணங்கள் எங்களுக்குப் போதிய உரிமைகளைத் தராவிட்டாலும் அவைகளை நாம் ஏற்றுக் கொண்டோம்.

தமிழ் மொழிச் சட்டம்

எப்பொழுதும் நாங்கள் பெரும்பான்மை இனத்தை எதிர்த்துக் கொண்டிருப்பவர்கள் என்று மக்களிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு தவறான கருத்தை நீக்குவதற்காகவும் பெரும்பான்மை மக்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்பதற்காகவும் நாங்கள் அவர்கள் நேசக்கரத்தை நீட்டியபொழுது அவர்களோடு சேர்ந்து ஒத்துழைத்தோம்.

ஆனால், எவ்வளவோ பாடுபட்டு நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழிச் சட்டம் இன்று முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

### மாசபை கேட்டது ஏன்?

இந்நாட்டிலே நாங்கள் சில அடிப்படை உரிமைகளை பெறுவதற்காகத்தான் தேசிய அரசாங்கத்துடன் சேர்ந்து உழைத்தோம். ஆனால், தேசிய அரசாங்கம் சிலவற்றை எங்களுக்குத்தர முடியாத ஒரு சூழ்நிலை வந்தது. அதை நாங்கள் மறக்கவில்லை.

நாங்கள் மாவட்ட சபையைக் கேட்டோம். அது இந்த நாட்டிலே ஆட்சியைப் பன்முகப்படுத்தும்; அதனாலே இந்நாட்டிலே மக்கள் நல்ல முறையிலே வாழலாம் என்று தான் கேட்டோம்.

நீங்கள் சமஷ்டிக் கொள்கைவிட்டாலென்ன வென்று சிலர் கேட்கின்றார்கள். சமஷ்டிக் கொள்கையை நாங்கள் கைவிட்டு விடலாம். ஆனால், இந்நாட்டிலே கடைசி ஒரு தமிழ் மகன் இருக்கும்வரை தனது உரிமையைப் பெற போராடுவான் என்று நான் இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

### அழிக்க முடியாது

இந்நாட்டிலே தமிழரசுக் கட்சியை அழித்துவிடுவோமென்று பலர் எண்ணுகின்றார்கள். ஆனால், அதை அழிக்க முடியாது. நாங்கள் இந்நாட்டிலே பிறந்து வளர்ந்தவர்கள், இந்நாட்டிலே பரம்பரை பரம்பரையாகச் சரித்திரமறியாக் காலந்தொடக்கம் இருக்கின்றவர்கள்; எங்களுக்கும் இங்கே உள்ள சிங்கள மக்களோடு சம உரிமையிருக்க வேண்டும்.

அந்த உரிமையைக் கொடுக்காதரை எந்தவிதமான மந்திரங்களினாலும் தந்திரங்களினாலும் தமிழ் மக்களை அடக்க முடியாது என்பதை நான் எனது எதிர்க்கட்சி நண்பர்களுக்குச் சொல்லிவைக்கக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

உங்களுக்கு எதற்காக உரிமை? நீங்கள் சிறுபான்மையினத்தை அடக்குகிறீர்கள்; சிறுபான்மைத் தமிழர்களை ஒடுக்குகிறீர்களே என்று எங்களுடைய கட்சியைப் பார்த்து இப்பொழுது சொல்லுகிறார்கள்.

ஆங்கிலேயர் இருந்த காலத்திலும் அவர்கள் அடக்கப்பட்டுத்தான் இருந்தார்கள். எங்கள் பகுதிகளில் மட்டுமன்று, சிங்களப் பகுதிகளிலும் அவர்கள் அடக்கப்பட்டுத்தான் இருந்தார்கள். அப்பொழுது ஆங்கிலேயர்கள் அதைச் சொல்லி நழுவிவிடவில்லை.

சிறுபான்மைத் தமிழர்களுடைய உரிமைகளைக் கொடுப்பது எங்களுடைய கடமை; அதை நாங்கள் கொடுக்கிறோம். ஆனால், இலங்கைத் தமிழர்களுக்கு உரிய உரிமைகளைக் கொடுப்பது பெரும்பான்மையினத்தவரின் கடமை.

தமிழரசுக் கட்சியினை அழித்துவிடுவோம்; தமிழரசுக் கட்சி பிரிவினையைக் கோருகிறது என்று சொல்லுகிறவர்களுக்கு அரசியல் வரலாற்றை நினைவூட்ட விரும்புகின்றேன். திருவாளர் பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டார்கள். அது இப்பொழுது நகைப்புக்குரிய விடயமாக இருந்தாலும், அரசியல் சிந்தனையிலே அது ஒரு படியாகும். அது நிறைவேறவில்லை.

நாங்கள் எங்களுக்கு ஒரு இணைப்பு ஆட்சியைத் தாருங்கள் என்று கேட்டோம். இந்த இணைப்பு ஆட்சியும் கிடைக்கவில்லையென்றால் என்ன நடக்கும். இப்பொழுது தனித் தமிழ் நாட்டுக் கோரிக்கை யாழ்ப்பாணத்திலே தோன்றியிருக்கிறது.

### தனித் தமிழ் நாடு

ஆகவே முதலில் உங்களுடன் சேர்ந்து வாழ விரும்பினோம். நாங்கள் அடக்கப்படாமல், உங்கள் ஆட்சிக்குள் அகப்படாமல், இணைப்பு ஆட்சியிலே உங்களுடன் சேர்ந்து வாழ விரும்பினோம். அதைக்கூட நீங்கள் மதிக்காவிட்டால், தனித் தமிழ் நாடு என்ற கோரிக்கை தோன்றுவதும், அது ஒரு காலத்திலே வேர்விட்ட கொள்கையாக தமிழனின் இரத்தத்திலே ஊறின கொள்கையாக— ஆவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

எங்களுடைய கட்சியைப் பற்றி எதையும் சொல்லுங்கள். ஆனால், ஒன்று மட்டும் சொல்கிறேன். நாங்கள் அடிப்படை உரிமைகளைத் தான் கேட்கிறோம். சிங்கள மக்களோடு தோளோடு தோள் நின்று இந்த நாட்டின் வளர்ச்சிக்காகப் போராட நாம் ஆயத்தமாக இருக்கிறோம்.

ஆனால், தமிழ்ப் பகுதிக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்பி, சிங்கள மொழியை எங்கள் தொண்டையில் திணித்து எங்களைச் சிங்களவர்களாக மாற்றலாம் என்று திரு. ஆர். ஜீ. சேனா

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சிறுகதை

# போராட்டம்

# "மட்டுவிலான்"

**தலை** காடாகக் கிடந்தது. ஐந்தாறு நாட்களாக முகம் வழிக்காததால் தாடி மயிர்கள் வேறு. மனையியின் நச்சரிப்பைத் தாங்க முடியாதவனாக அன்றைக்கு எப்படியும் சலூனுக்குப் போவதென முடிவு செய்தேன்,

தலைக்கடியைக் கூட ஒருவாறு தாங்கிக் கொள்ளலாம். ஆனால் என்னுடைய 'அவளின்' தொணதொணப்பைத் தாங்கவே முடியாது.

சரி, திட்டத்தைச் செயற்படுத்தியாயிற்று. அன்று சந்தைமுறை. ஆகவே சலூன் நிரம்பி வழிந்தது. ரேடியோ தன்பாட்டுக்கு அலறிக் கொண்டிருந்தது. சனங்கள் தம்பாட்டில் பேசிக் கொண்டிருந்தனர். எனது முறை வரும்வரை பொறுமையாகக் காத்திருக்க வேண்டி இருக்கவே அருகிலிருந்த ஒரு தினசரிப் பத்திரிகையை எடுத்துக் கண்ணோட்டம்விட்டேன். ஏதோ ஒரு கோவிலில் ஹரிசனங்கள் தமது வழிபாட்டுரிமையைப் பெறுவதற்காக நடத்திக் கொண்டிருந்த போராட்டத்தைப் பற்றி அந்தப் பத்திரிகையிலே பந்தி பந்தியாக எழுதியிருந்தார்கள்.

சலூனில் இருந்த அத்தனை பேரது வாயிலும் கூட அதே பேச்சுத் தான். எல்லாரும் உணர்ச்சிக் கொந்தளிப்பில் நின்றார்கள். ஹரிஜனர்க்கு ஆதரவாகப் பேசுவார் அங்கு யாருமிலர்,

திடீரென்று ஒருவர் பாடத் தொடங்கினார்.

"பள்ளர் நளவரெல்லாம்
மரமேறும் தொழிலை
விட்டு
மெள்ள மெள்ளமாக
அவர் வெள்ளாளர்
ஆகிறார்கள்
இன்னுங் கொஞ்சக்
காலஞ் செல்ல
வெள்ளாளர் ஆகிடுவர்"

என்று ஒரு பாடலை — அது நாட்டுப் பாடலோ அல்லது அவரால்இயற்றப்பட்டதோ தெரியாது — இராகத்துடன் பாடினார்.

இன்னொருவர் குறுக்கிட்டுச் சொன்னார் "அவங்களுக்கெல்லாம் இப்ப கொழுப்பு மிஞ்சுப் போச்சு. கையிலை மடியிலை கொஞ்சங் காசு புளங்கிற திமிர். இன்னுங் கொஞ்ச நாள் போனால் எங்களிட்டை பொம்பிளை கேக்கவும் வருவினம்."

"சரியாகச் சொன்னியள். உவங்களுக்கு நல்ல பாடம் படிப்பிக்கோணும்." இன்னொருவர் கூறினார்.

சலூன்காரனும் சில நாட்கள் முன்னதாகத் தன்னிடம் முடி வெட்டிக் கொள்ள வந்த தாழ்ந்த குலத்தவன் ஒருவனைத் தான் விரட்டியடித்த வீரப்பிரதாபத்தை அளந்து கொண்டிருந்தான்.

எனதுசிந்தனை திடீரென்று சாதிப் பிரச்சினையை நோக்கித் தாவியது. மேல் நாடுகளெல்லாம் சந்திர மண்டலத்தில் இறங்குவதிலும் இருதய மாற்றத்திலும் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கையில் யாழ்ப்பாணத் தமிழன் சாதி பேசிக் கொண்டிருப்பது விந்தையிலும் பெரிய விந்தையாக எனக்குத்தோற்றியது.

எனக்கு இந்தச் சாதிக் கட்டுப் பாடுகளில் அவ்வளவாக நம்பிக்கை இல்லை. ஒரு மனிதனிடத்தில் என்ன குறை கண்டு அவனைக் கீழ் சாதி என்று ஒதுக்கி வைக்கிறார்கள் என்று எப்போதுமே வியந்திருக்கிறேன்.

சிந்தனையில் ஆழ்ந்திருந்தவன் திடீரென நிமிர்ந்து பார்த்தேன். பக்கத்துக் கதிரையில்இருந்த ஒருவனுக்குச் சலூன்காரன் மயிர் வெட்டிக்கொண்டிருந்தான். ஆனால் அவனோ என்னைப் பார்த்து மிரள மிரள விழித்துக் கொண்டிருந்தான்.

அவன்ஏன் என்னைப் பார்த்துப் பதற்றம் அடைய வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. எங்கோ பார்த்த முகம்போல் இருக்கவே உற்றுப் பார்த்தேன். சில வருடங்களுக்கு முன்னால் எங்கள் வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருந்த நல்லான் தான் அவன் என்பது புரிந்தது. முன்பு குடுமியோடு காணப்படுவான். இப்போது குடுமி இல்லை. அவ்வளவு தான். வேறு மாற்றங்கள் தென்படவில்லை

அவனுடைய பதற்றத்துக்குக் காரணமும் தெரிந்தது. அவன் ஒரு தாழ்ந்த குலத்தவன்.

எனக்குச் சிறு வயது தொட்டே அவனைத் தெரியும். எங்களுக்குத் தேங்காய்பிடுங்கிக் கொடுப்பது மட்டுமின்றி விறகு கொத்துதல் போன்ற வேறு வேலைகளையும் செய்து கொடுப்பான்.

ஆறேழு வருடங்களாகத் தான் நான் அவனைக் காணவில்லை. அதற்கு முன்னர் அவனை எங்கள் வீட்டில்

"சாதி என்பது ஒருவித மனக் கோளாறு. அது காலப்போக்கிலே அழிந்துவிடும், திடீரென்று மாற்ற வேண்டுமானால் பொலீஸ் காரர்களாலும் துப்பாக்கிகளாலும் சட்டத்தாலும் முடியாது. மனநோய் வைத்திய நிபுணர்களால் தான் மாற்ற முடியும்......"

எந்நாளும் காணலாம். வீட்டுக்கு வந்தால் முற்றத்தில் தான் இருப்பான. சிரட்டையில் அவனுக்கு ஏதும் குடிப்பதற்கு வழங்குவோம்.

எனக்குப் பத்துவயதாக இருந்த போது கூட அவன் என்னோடு மரியாதையாகத் தான் பழகுவான்.

ஒரு நாள் நான் கையிலே வைத்திருந்த ஒரு பூவரசந் தடியினால் அவன் முதுகிலே பளார் என்று ஓர் அடிவிட்டது என் வாழ் நாளிலே மறக்க முடியாத ஒரு சம்பவம். அவனுக்கு நன்றாக வலித்திருக்க வேண்டும் என்பது அவனது முகம் கோணியதிலிருந்து விளங்கியது.

ஆனாலும்

'நமக்கு என்னவாக்கும்... நெடுக விளையாட்டுத்தான்' என்று கூறியவாறு எழுந்து மண்ணைத் தட்டிக்கொண்டு நடந்துவிட்டான்.

'போடா போ' என்று கத்தினேன் நான். என்றைக்கும் நான் அவனோடு மரியாதையாகப் பேசியதில்லை.

இப்போது அவனைக் கண்டதும் மனம் 'திக்' என்றது. ஓரளவுக்கு நான் ஒரு சீர்திருத்தவாதி என்று கூறலாம். சாதி என்பதெல்லாம் வெறும் அடக்குமுறையே தவிர வேறொன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்திருந்தவன் நான். அப்படி இருந்தும் கூட நல்லானைப் பார்த்ததும் எனது மனத்தை என்னவோ உறுத்தியது. எனக்குப் பக்கத்தில் என்னோடு சமமாக அவன் இருப்பதைக் காண என்னால் சகிக்க முடியவில்லை.

இது ஏன்?—

எனது அமைதியற்ற தன்மைக்குக் காரணம் தெரியாமல் மனம் கலங்கிய குட்டையாகக் குழம்பித் தவித்தது.

என்னுடைய கொள்கைகள் எல்லாம் வார்த்தையளவிற்தானா என்று என்னையே கேட்டுக்கொள்கிறேன். அப்படியும் சொல்வதற்கில்லை.

தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த நண்பர்கள் சிலர்— அதிலும் ஒரிருவர் மிக நெருங்கிய நண்பர்கள்— எனக்கு இருக்கிறார்கள்.

அவர்களை வீட்டுக்கு அழைத்து வந்து அம்மாவுக்கு அவர்கள் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கூறாமலே அவர்களுக்குத் தேனீர் கொடுத்து அவர்களோடு உரையாடி மகிழ்ந்திருக்கிறேன்.

ஒரு முறை தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த நண்பன் ஒருவனைச் சமையலறைக்கு அழைத்துச் சென்று அவனோடு ஒன்றாக இருந்து சாப்பிட்டிருக்கிறேன். அவன் தாழ்ந்த குலத்தவன் என்பது தெரியாமலேயே அம்மா சிரித்துச் சிரித்து அவனுக்குப் பரிமாறியதைக் கண்டு உள்ளத்துக்குள்ளே நான் சிரித்ததும் ஞாபகமிருக்கிறது.

இப்படியெல்லாம் இருக்கையில் வார்த்தையளவில் மட்டும்தான் நான் சீர்திருத்வாதி என்றும் கூற முடியவில்லை.

ரேடியோ அலறிக்கொண்டுதான் இருந்தது. நல்லானும் அமைதியற்று நெளிந்து கொண்டுதான் இருந்தான். சலூன்காரன் அவனது தலையைப் பிடித்துத் திருப்பி விட்ட நேரம் தவிர மற்ற நேரங்களில் அவன் பரிதாபமாக என்னைப் பார்த்துக் கொண்டுடிருந்தான். காட்டிக்கொடுத்துவிடவேண்டாமென்று அவனது கண்கள் கெஞ்சினாற் போலப் பட்டது எனக்கு.

'என்ன மாஸ்டர் பேசாமல் இருக்கிறியள்' சலூன்காரன் தான் கேட்டான்.

'..............'

'இவங்களின்ரை அநியாயத்தைப் பார்த்தியளே. அவையளுக்கும் நாங்கள் எல்லே தலை மயிர் வெட்ட வேணுமாம்'.

'உம்...உம்...' நான் முனகினேன்.

சலூன் காரனின் வார்த்தைகள் நல்லானுக்குச் சாட்டையடியாகப் பட்டிருக்க வேண்டும். அவன் உடல் ஒருமுறை உதறியது. பலியாடு பார்ப்பதைப் போலப் பரிதாபமாக என்னைப் பார்த்தான். நான் மட்டும் அவனைக் காட்டிக் கொடுத்தால்......அப் போ இருந்த ஆவேச நிலையில் அவனைப் பிய்த்துப் பிடுங்கியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

என்னு மனம் கணத்துக்குக் கணம் [illegible] தத் தளித்தது.

நல்லானை நோக்க நோக்க என்னை ஒருவித அருவருப்பு உணர்ச்சி ஆட்கொண்டது. எங்கே அவனைக் காட்டிக் கொடுத்து விடுவேனோ என்று பயந்தேன். முள்ளின் மேல் இருந்தாற் போல் இருந்தேன்.

அந்நேரம், அன்று மாலை நடக்கவிருந்த ஒரு கூட்டத்தைப் பற்றி ஒலி பரப்பி மூலம் அறிவித்தபடி. ஒரு கார் வந்தது. சலூனுக்குச் சற்றுத் தள்ளி ஓரிடத்தில் கார் நின்றது. தீண்டாமை ஒழிப்பை நிறைவேற்றும் பொருட்டு அன்று மாலை ஒரு கூட்டம் நடக்க இருப்பதாக அறிவிப்பாளர் அறிவித்தார்.

'தீண்டாமை ஒழியட்டும். சகல ஆலயக் கதவுகளும் திறக்கட்டும்' என்று அறிவிப்பாளர் முழங்கினார்.

சலூனுள் இருந்த ஒருவன் 'கொளுத்தடா காரை' என்று கத்தியபடி காரை நோக்கி ஓடினான்.

நான்கைந்து பேர் அவனைத் தொடர்ந்து ஓடினர்.

சலூன் காரனும் வேடிக்கை பார்க்க வெளியே ஓடினான். நானும் நல்லானும் தனித்து விடப்பட்டோம். அவனது உடம்பெல்லாம் வேர்வையால் தெப்பலாக நனைந்திருந்தது.

'தம்பி' என்று நாக்குழறஎன்னைக் கூப்பிட்டான். மேலே அவனாற் பேச முடியவில்லை. என்னைப் பார்த்துக் கைகூப்பினான்.

அவனைப்பார்க்கப்பரிதாபமாகவிருந்தது. அங்கிருந்தால் அவனைக் காட்டிக் கொடுத்து விடுவேனோ என்ற பயத்தில் மயிர் வெட்டும் நோக்கத்தைக் கைவிட்டு வெளியே நடந்தேன்.

கார் மீது பாய்ந்தவர்கள் கார் புறப்பட்டு போய் விட்டதால் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தார்கள். 'மாஸ்டர் இன்னும் கொஞ்சம் இருங்கோ ஆக் இரண்டு மூன்று பேர்தானே' என்று நான் போவதைக் கண்ட சலூன்காரன் கூப்பிட்டான். நான் ஒன்றும் பேசாமல் நடந்தேன். 'இந்த மாஸ்டருக்கு எப்பவும் அவசரம் தான்.' என்று சலூன்காரன் முணுமுணுத்தது தெளிவாகக் கேட்டது.

போகின்ற வழியிலே நல்லானைப்பற்றி என்னிடம் ஏற்பட்ட சலனத்தை எண்ணினேன். வெட்கம் என்னை அரித்துத் தின்றது.

என்னுடைய சீர் திருத்தம் எங்கே போய்விட்டது. மனதுக்குத் திடீரென்று என்ன வந்துவிட்டது.என்று வியந்தேன்.

காலங்காலமாக மக்கள் மனதிலே ஊறிப் போய் விட்ட சாதியை ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் அழித்து ஒழித்து விடல் எளிதான செயலா என்று என்னையே நான் கேட்டுக்கொண்டேன்.

சாதி என்பது ஒரு வித மனக்கோளாறு. அதுகாலப் போக்கிலே அழிந்துவிடும். திடீரென்று மாற்ற வேண்டுமானால் பொலீஸ்காரர்களாலும் துப்பாக்கிகளாலும் சட்டத்தாலும் முடியாது. மனநோய் வைத்திய நிபுணர்களால்தான் மாற்ற முடியும் என்ற முடிவுக்கு என்னால் வரமுடிந்தது.

நான் சிறிது படித்தவனாக இருந்தும் கூட நல்லானை என்னால் அவ்வளவு எளிதில் என்னோடு சமமாக வைத்து நோக்க முடியவில்லையே. ஆனால் சிறுவயது தொட்டு என்னோடு பேதமின்றிப் பழகிய தாழ்த்தப்பட்ட நண்பர்களை என்னோடு சமமாக வைத்து நோக்க முடிகிறது.

இது மனக்கோளாறே தவிர வேறென்ன?

இப்படியிருக்கையில் தாழ்த்தப்பட்டவர்களை எப்பொழுதும் 'எட்ட' வைத்துப் பழகி வருகிற படிக்காத பாமர உயர் சாதி மக்களை எவ்வாறு குற்றஞ் சாட்டுவது என்று எனது அறிவு வாதித்தது. அவர்களுடைய மனம் இரவோடிரவாக மாறிவிடும் என்று எதிர்பார்ப்பதைவிட முட்டாள் தனம் வேறொன்றுமே யில்லை.

சிந்தனையில் ஆழ்ந்தவன் வீடு வந்தது கூடத் தெரியாமல் நேரே நடந்து விட்டேன். 'அப்பா அப்பா எங்கை போறியள்'? என்று மகன் அழைத்தப் போது தான் சுய உணர்வு பெற்று வீட்டுள் நுழைந்தேன்.

எதிரே வந்த மனைவி எனக்குத்தெரியும் ... எனக்குத் தெரியும்...' என்று ஏதோ சொல்லத் தொடங்கியவள் என்னுடைய முகத்தைப் பார்த்ததும் சொல்ல வந்ததைச் சொல்லாமலே உள்ளே சென்றாள்.

அவள் என்ன சொல்ல முனைந்தாள் என்பது எனக்குத் தெரியாதா, என்ன? சிரித்து விட்டுப் பேசாமல் இருந்தேன்.

(யாவும் கற்பனை)

## சிங்களம் மட்டும்...

(2-ம் பக்கம் தொடர்ச்சி

தேசிய நலனுக்கு தமிழரசுக்கட்சி ஒரு போதும் குந்தகமாக இருக்க மாட்டாது. அதே வேளையில் தேசியப் போர்வையில் பெரும் பான்மை இனத்தால் சிறுபான்மை இனம் நசுக்கப்பட்டு அழிக்கப்படுவதற்கும் இடம்தர மாட்டாது.

## பிரதேசு...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்க போன்றவர்களும், எங்கள் பிரதேசங்களை குடியேற்றத் திட்டங்கள் மூலம் சிங்களப் பிரதேசமாக்கலாம் என்று திரு. பசனாயக்கா போன்றவர்களும் கனவு கண்டால் அது முடியவே முடியாதென்பதைத் தமிழினத்தின் சார்பில் சொல்லி எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பொழுது காட்சியளிக்கிறது! வின்சர் (யாழ்நகர்)

# ஆகஸ்ட் 28ந் திகதி முதல்!

செல்லமகால் (கொழும்பு) ஈரொஸ் (பாமன்கடை) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை)

மற்றும் திரைகளில்!

★ ரவிச்சந்திரன் ★ ஜெயலலிதா ★ நாகேஷ் ★ பாலையா
★ வி. கே. ராமசாமி ★ சுந்தரராஜன் ★ உதயசந்திரிகா
★ டி. எஸ். முத்தையா ★ சரஸ்வதி ★ விஜயஸ்ரீ

—நடிக்கும்—

# மாடி வீட்டு மாப்பிள்ளை

2-வது வாரமாக கெயிட்டியில்

முத்துராமன், ராஜஸ்ரீ, —நடிக்கும்—

## அனுபவம் புதுமை

எதிர்பாருங்கள்! எம். ஜி. ஆர். ஜெயலலிதா —நடித்த— இரகசிய பொலிஸ் 115

---

# 57 - வது மங்களகரமான நாள்!

"பத்திரிகைகள ஒரே குரலில் பாராட்டுகின்றன! இரசிகப்பெருமக்களின் பாராட்டுதல்கள் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றன!! வசூலில் ஓர் மாபெரும் சாதனையை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றது!!! சென்னையில் 150 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிமுரசு கொட்டி இன்னும் ஓடிக்கொண்டிருக்கும் ஒப்புயர்வற்ற ஒரே சித்திரம்!

சென்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்) ஈஸ்வரன் (கிளிநொச்சி) ஆனந்தா (கம்பளை)

சென்ட்ரல் (பருத்தித்துறை) ஈஸ்டேர்ன் (சம்மாந்துறை) நியூஜோதி (இரத்தினபுரி) ராதா (கந்தப்பளை)

ஜெமினிகணேசன், சரோஜாதேவி, நாகேஷ், விஜயநிர்மலா, புஷ்பலதா சிவகுமார், பகவதி, எல். வரலட்சுமி, —நடித்த—



# பணமா? பாசமா?

விரைவில் எதிர்பாருங்கள்! தேர்த்திருவிழா

★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா ⚜ நாகேஸ் —நடித்த—

---

# ஜனத்திரள் நிறைந்த 5 - வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்) வெலிங்டன் (யாழ்நகர்) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) விஜித (ஹற்றன்)



* முத்துராமன் * ஜெயலலிதா * நாகேஷ்
* ரவிச்சந்திரன் * அசோகன்
* மனோரமா * மனோகர்

—நடித்த—

ஈஸ்ட்மன் கலர் சித்திரம்

# நான்

4 - வது வாரம்!

லிடோ (பொரளை) கெப்பிட்டல் (கொழும்பு) சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிக்கைசிலோன் நியூஸ்பேப்பர் லிமிட்டெட்ஸ்தா பனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194, ஏ, இலக்கத்தில் 1968-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 22-ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.